பக்கங்கள்: பத்து
ered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 07 | வியாழக்கிழமை | (20-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 153

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இந்தியப் பிரதமராக மன்மோகன் சிங்

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக சீக்கிய, சிறுபான்மை இனத்தைச்



சேர்ந்த முன்னாள் நிதியமைச்சர் மன்மோகன் சிங் நேற்று மாலை நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி தான் பிரதமர் பதவியை ஏற்க விரும்பவில்லை என அறிவித்ததைத் தொடர்ந்தே அப் பதவிக்கு மன்மோகன் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் வாசஸ தலத்திற்குச் சென்ற சோனியா காந்தி பிரதமராக மன்மோகன் சிங் நியமிக்கப்பட்டது தொடர்பாக விளக்கிக் கூறியதுடன் ஆதரவுக் கட்சிகளின் சம்மதக் கடிதத்தையும் சமர்ப்பித்தார். அதனை ஏற்றுக் கொண்ட அப்துல் கலாம் மன் மோகன் சிங்கை ஆட்சியமைக்க அழைப்பு விடுத்துள்ளார். (ச)

### ஹெல உறுமய எம்.பியின் இராஜிநாமா எதிரொலி

## பாராளுமன்றத்தில் நேற்று பெரும் கூச்சல் குழப்பம்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடிய போது சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினரான கதலுவே ரதனசீக தேரர் தனது பதவியை இராஜிநாமாச் செய்திருப்பதாக சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்கு பண்டார பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வாசித்த போது இந்த அமளி துமளி ஏற்பட்டது.

பதவி விலகிய தேரர் தமது இராஜிநாமாக் கடிதத்தை சபாநாயகர் முனனிலையிலேயே செயலாளரிடம் கையளித்தார். தாம் எந்தஒரு அச் சுறுத்தலின் காரணமாகவும் பதவியை இராஜிநாமா செய்யவில்லை என்று தேரர் தமக்கு அறிவித்த தாக சபாநாயகர் கூறினார். ஆயினும் பிரதி அமைச்சர் சேபதி சூரியராச்சி இந்த இராஜிநாமா சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக சபையில் தெரிவித்தார். இதனால் இந்த இரா ஜிநாமாவை தற்காலிகமாக ஏற்கக் கூடாதென்று அவர் குறிப்பிட்டார் ஆயினும் உறுப்பினர் ஒருவர் பதவியை இராஜிநாமா செய்வதற்கு உரிமை இருப்பதாக சபாநாயகர் கூறிய வேளையில் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, நநதன குணதிலக்க, மேர்வின் சிலவா ஆகியோர் தங்களது கருத்துக் களை தெரிவித்தனர்.

ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரி வித்த கருத்து விவாதத்துடன் தொடர்பு டையது அல்ல என தெரிவித்த சபா நாயகர் அவரது உரையை கனசாட் டிலருந்து நீக்குமாறு உத்தரவிட்டார்.

(10ம் பக்கம் பார்க்க)



அண்மையில் கந்தப்பொலவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து நேற்று பாராளுமன்றம் சென்ற போது...

# சமாதானப் பேச்சு ஒஸ்லோவில்!

## ஜூலை இறுதியில் நடக்கும்

(நமது நிருபர்)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதல் சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ஜூலை மாத இறுதியில் அல்லது ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் நடத்துவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளன.**

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் நோர்வே அனுசரணை யாளர்கள் சமாதானப் பேச்சு வார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை தயாரித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல நிலையைக் கருத்தில் கொண டும், விடுதலைப் புலிகளின் தலை மை சுட்டிக்காட்டிய அடிப்படை விடயங்களில் ஒன்றான ஐரோபபிய நாடு ஒன்றிலேயே பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என்பதற்க மையவும, நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் முதற் சுற்று சமாதா னப் பேச்சுவார்த்தையை நடத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தையை ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சுவிற்சர்லாந்தில் நடத்தவும் முதற் கட்டமாக இரு தரப்பும் இணங்கியுள்ளன.

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிரவாகம் பற்றியே அரசு – புலிகள் சமாதானப் பேச்சு

### செய்தியாளர் மத்தியில் யசூசி அகாஷி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கையை அடிப்படை யாக வைத்தே சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்று ஜப்பானின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜசூசி அகாஷி தெரிவித்துள்ளார். இலங் கைக்கான 4 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பு வதற்கு முன்னர் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று பிற்பகல் நடத்திய ஊடகவிய லாளர் மாநாட்டிலேயே விசேட தூதுவர் அகாஷி இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதான முயற்சிகளில் திறந்த மனதுடன் செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அத்துடன் இந்தப் பேச்சு வார்த்தைகளின்போது புலிகளும் அரசாங்கமும் சில வடயஙகளில் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்வார் கள் என்று நாம் நம்புகிறோம்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உருவாக்கப்படுவதன் அவ சியத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே வலியுறுத்தி வந்தனர். எனவே இந்த விடயத் திற்கு சமாதான பேச்சு வார்த்தை யில் முக்கியத்துவம் வழங்கப் படும் என்று அகாஷி குறிப்பிடடார்.

இதேவேளை யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து சமாதான பேச்சுவார்த்தையின் போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் அகாஷி மேலும் தெரிவித்தார்

(121)

## புலனாய்வு அதிகாரி கொலை விடுதலைப் புலிகள் மறுப்பு

(மட்டக்களப்பு)

மடடக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு அருகில் இராணுவப் புலனாய்வு அதிகாரி உயிரிழப் பதற்கு காரணமான நேற்றைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற் கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் எந்தவித தொடர்பும் இல்லை என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப் பாளர் கௌசல்யன் தெரிவித்துள் ளார்.

நாட்டில் தற்போது நிலவிவரும் அமைதியையும், சமாதானச் சூழலையும் குலைப்பதற்காக சில தீய சக்திகளே இவ்வாறான நட வடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையின ருக்கும் இடையில் நிலவிவரும் புரிந்துணர்வையும், நல்லுறவையும் சீரகுலைக்கும் சதி முயற்சி என்றே இச் சம்பவத்தை நாம் கருதுகிறோம்.

(10ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. எம்.பீ. இராஜிநாமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப் படுத்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யு. புஸ்பகுமார தனது பதவியை இரா ஜிநாமா செய்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத் தில விசேட உரை ஒன்றை ஆற்றிய பின்னரே அவர் தனது இராஜிநா மாக கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்தும் முகமாகவும் முஸலிம் இனத்தவர் ஒருவரை பாராளுமன்றத் தில் நியமிப்பதற்கு வழிவகுக்கும் பொருட்டுமே தான் பதவி விலகியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (த-121)

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நால்வர் கட்சியில் இருந்து நீக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால் வர் கட்சியில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளனர். இது தொடர்பான அறிவிப்பை கட்சியின் தலைமைப் பீடம் நேற்று வெளியிட்டுள்ளது. கட்சியின் செயற்பாட்டிற்கும், தலைமைப் பீடத்திற்கும் எதிராக செயற்பட்டுள்ளதாலேயே இத் தீர் மானம் எடுக்கப்பட்டதாக கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவித் தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன், நஜீப் எ. மஜித், குசைன்பைலா, மசூதீன் இனாமுல்லா ஆகிய நால்வருமே கட்சியில் இருந்து இடைநிறுத்தபபட்டுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மட்டு. தளபதிகள் தலைவர் பிரபாவை சந்திப்பர்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் விசேட சந்திப்பை மேறகொள்வதற்காக மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், தளபதிகளான ராம், ஜனார்த்தனன், ஜெயந்தன் ஆகியோர் நேற்று வன்னிககு வருகை தந்துள்ளனர்.

இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் வழித்துணை யுடன் படையினரது விசேட பாதுகாப் புடனும் இவர்கள் செங்கலடி கறுத் தப்பாலம் இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக வன்னிக்குச் சென் றுள்ளனர்.

இதேவேளை சில தினங்களுககு முன்னர் மட்டக்களப்புக்குச் சென் றிருந்த விடுதலைப் புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, அரசசார்பற்ற நிறுவனங் களுக்கான இணைப்பாளர் தியாகராசா ஆகியோரும் வன்னிக்கு திரும்பி உள்ளனர்.

நேற்றுக் காலை 8 மணியள வில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து புறப்பட்ட இவர்களின் வாகன அணி வன்னியை வந்தடைந்துள்ளது. தலைவர் பிரபாவை அவர்கள் இன்று சந்திக்க வுள்ளனர். (ச-121)

## இன்று ஒரு தகவல்

# ஒவ்வாமை

எனக்குத்தெரிந்த ஒருவர் இறப்பர் செருப்பைக் கண்டால் இறப்பர் மாதிரித் துள்ளித்துள்ளி ஓடுவார். " என்ன விஷயம்?" என்று விசாரித்தேன். "இறப்பர் எனக்கு ஒத்துக்கொள்ளாது அலர்ஜி" என்றார். சிலர் உணவில் நல்லெண்ணை சேர்த்துக் கொண்டால் கடிக்க ஆரம்பித்துவிடும். "ஒரு மனிதனுக்கு உணவு. அதுவே இன்னொருவனுக்கு விஷம்" என்று கூறியுள்ளார் லுக்ரிஷியன் என்று ஓர் விஞ்ஞானி . முதல் நூற்றாண்டுகளிலேயே அவர் இதைக் கூறியுள்ளார். அலர்ஜி பற்றி முதலில் கூறப்பட்ட கருத்து இது தான்.

தற்போதுள்ள மருத்துவ அறிஞர்கள் அலர்ஜிக்கு என்ன விளக்கம் கொடுக்கின்றனர் தெரியுமா? ஒரு மனிதன் தன்னைச் சுற்றியுள்ள அபாயமில்லாத சில பொருட்களுடன் சிறிது மாறுபட்ட நிலையில் கூட அதிகப் பாதிபபு அடைவது அதாவது ர்லிநச ளுநளெவைளைவைல என்று கூறுகின்றனர். அதாவது உடலின் இயல்போடு ஒத்துக்கொள்ளாத சில பொருட்களால் ஏற்படும் பாதிப்பு அலர்ஜி. இந்தப்பாதிப்பு எமது உடலில் எத்தனையோ விதமாக இருக்கும். பொதுவாக சரும பாதிப்பு அதிகம். ஆஸ்மா அலர்ஜியினால் வருவது தான். உண்ணும் உணவுகள் காரணமாக அலர்ஜி ஏற்படு வது ஒரு வகை. வேறு வகையாகவும் இது வரலாம்.

காற்றிலுள்ள தூசு, தும்பு இவற்றைச் சுவாசிப்பதனால் சிலருக்கு அலர்ஜிவரலாம். நாய்க்குடைக்காளனில் உண்டாகும் ஒரு வகை கிருமிகள் கூட அலர்ஜிக்கு ஆதாரமாக அமைவது உண்டு.கழுதை, குதிரை,நாய் போன்றவற்றின் கிருமிகளும் அலர்ஜியை உண்டாக்கும். சில வகையான இரசாயனப் பொருட்கள், பென்சிலின், ஸ்ட்ரெப்டோ மைசின், அஸ்பிரின் இவற்றினா லும் வரலாம்.

உதட்டுச்சாயம்,முகப்பவுடர்,முகத்தில் பூசும்கிரீம், சவர்க்காரம் கூந்தல் தைலம் என்பவை சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. இதை எடுத்துக் கூறி "இது உனக்கு ஒத்துக்கொள்ளாது. அதனால் இது வேண்டாம்" என்று கூறினால் சிலர் அதை ஒத்துக்கொள்வதில்லை. சிலருக்கு டெர்லின் துணி ஒத்துக் கொள்ளாது. பிளாஸ்ரிக் போன்றவை சிலருக்கு ஒத்துக்கொள் ளாது.

அலர்ஜி ஏற்படுவதற்கான காரணம் எல்லோருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பொதுவாக மனித உடலிலுள்ளே புகக் கூடிய எந்த நச்சுப்பொருளையும் எதிர்த்து அழிக்கக்கூடிய அணுக்கள் - யுவெடைழனைநள உள்ளன. இவை நம் உடலினுள் வேறு ஏதாவது நச்சுப்பொருள் அல்லது நச்சுக்கிருமி புகுந்தால் உடனே அதை அழித்து வெளியேற்றி விடும்.

ஆனால் சிலரது உடலில் என்ன நடக்கின்றது தெரியுமா? நச்சு எதிர்ப்பு அணு உடலை நச்சுக்கிருமியிடம் இருந்து காப்பாற் றுவதற்குப் பதிலாக அலர்ஜின்களுக்கு உதவியாக மாறி விடுகின்றது. எம்மில் சிலர் செய்வது போன்று அது அலர்ஜியாக மாறி விடும். எதிரி காலில் விழுந்து விடுவார்கள் அல்லவா அது போல்.

இந்த நச்சு எதிர்ப்பு அணுவுக்கு (**Reagin**) "ரியகின்" என்று பெயர். ஆஸ்மா போன்ற அலர்ஜி குளிர்காலத்தில் தான் அதிகமாக இருக்கும். சிலவித அலர்ஜி உயிருக்கே ஆபத்தாகி விடும். மருத்துவ உலகில் அலர்ஜியை இரு விதமாகப் பிரிக்கின்றனர். திடீர் என்று நோயை உண்டாக்குவது ஒருவகை அலர்ஜி. இன்னுமோர் வகை முதன் முதலில் உடம்பில் சேரும அலர்ஜி களால் எந்த வியாதியும் வருவதில்லை. இரண்டாவது தடவை யும் அலர்ஜின்களால பாதிப்பு ஏற்பட்ட பின்பு தான் நோயின் .அறிகுறிகள் வெளியே தெரியும்.

அலர்ஜி ஏற்படுவதற்குப் பல காரணங்களைக் கூறுவார்கள். மனதில் ஏற்படும் காரணமற்ற பீதி கூட அலர்ஜியை உருவாக்கி விடுமாம்.அதனால் எல்லோரும் எப்போதும் தைரியமாக இருங் கள். அலர்ஜியினால் உண்டாகும் நோயைத் தற்காலிகமாக குணப்படுத்தலாம்.

எந்தப்பொருள் நமது உடலுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்பது விளங்கிக்கொண்டு அதைத் தவிர்த்துக்கொள்வது தான் விவேகம். சில குடும்பத் தலைவிகள் இந்த விடயத்தில் மிகுந்த புத்திசாலித்தனமாகச் செயற்படுவார்கள். குடும்ப அங்கத் தவர்களுக்கு எவை ஒத்துக்கொள்ளும்,எவை ஒத்துக்கொள்ளாது என மிக நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருப்பர்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண் உடைகள் வாங்க வேண்டும என்றால், கணவரை அழைத்துச் செல்வதில்லை. ஏனென்றால் பற்றுச் சீட்டைப் பார்த்தால் அவருக்கு அலர்ஜி வந்து விடுமாம். கணவர் மீது இவருக்கு அவ்வளவு அக்கறை .

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## கசூரினா கடற்கரையில்

# கலாசாரத்தை சீரழிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## அபிவிருத்திச் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கசூரினா உல்லாசக் கடற்கரையில் கலாசாரத்தைச் சீரழிக்கும் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கசூரினா கடற்கரை அபிவிருத்திச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இவ் அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எமது பிரதேசம் கடந்த 20 ஆண்டுகால கொடூர யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இங்கு இளையவர்களுக்கான பொழுதுபோக்கு வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு எமது அமைப்பு கசூரினா கடற்கரையை உல்லாசப் பிரயாணிகளுக்கு ஏற்ற விதத்தில் புனரமைப்புச் செய்து உல்லாசப் பயணிகளுடைய நன்மை கருதிய நடவடிக்கைகளில் எமது சங்கம் ஈடுபட்டு வருகிறது.

ஆனாலும் இங்கு வரும் இளைஞர்கள் பலர் கலாசார சீரழிவுகள் உருவாவதற்கு காரணமாக இருக்கின்றனர். குறிப்பாக மது அருந்திப் பொழுது போக்க முற்படுவதுடன் இங்கு வரும்பெண்களோடு தகாத முறையில் நடந்துகொள்கின்றனர்.அத்துடன் அவதூறான வார்த்தைகளைப் பிரயோகித்து ஏசுதல், சண்டையிடுதல், மதுபானப் போத்தல்களை உடைத்து கடலினுள் எறிதல், கலாசாரத்திற்கு முரணான உடைகளில் நீராடுதல் போன்ற கலாசாரத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவை எமது கலாசாரத்திற்கும் பண்பாட்டிற்கும் இழுக்கை உருவாக்கும் என்பதால் இச்செயற்பாடுகள் உடனடியாக கைவிடப்படல் வேண்டும் எனக் கோரியுள்ள கசூரினா கடற்கரை அபிவிருத்திச் சங்கம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது கடுக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (4)

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் இன்று ஜப்பான் செல்கிறார்

(கொழும்பு)

நோர்வே வெளிவிகார அமைச்சர் ஜோன் பீற்றர்சென் இன்று விஜயம் ஒன்றை மேற்கொள்ள வுள்ளார்.



இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயும் பொருட்டு நோர்வே வெளி விவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சென் ஜப்பான் செல கின்றார்.

ஜப்பான் செல் லும் இவர் அங்கு ஜப்பானிய வெளி விவகார அமைச் சர் உட்பட உயர் அதிகாரிகளைச் சந் தித்துப் பேச்சுவார்த் தைகளை நடத்துவார்.

இதேவேளை, ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கைக்கு விஜயம் செய்திருப்பதுடன் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படல் வேண்டியதன் அவசியம் குறித்தும்,

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றமை தெரிந்ததே. (60,10)

## இராசி பலன்

**20.05.2004**

**(வைகாசி 07, வியாழக்கிழமை)**

**பிரதமை பி.ப 12.22 மணிவரை**

**ரோகிணி முன்னிரவு 11.38மணிவரை**

**இராகுகாலம் 1.22-2.52மணிவரை**

**சுபநேரம் 7.22-8.52. மணிவரை**

**மேடம்**
அதிக வார்த்தை, தனவிரயம், காரிய தாமதம்,தொழில் கஷ்டம் .

**இடபம்**
தேக நலன், வெகுமானம், சயனசுகம், மாதர்நட்பு.

**மிதுனம்**
சோம்பல்நிலை, பணிவிடை, காரிய தாமதம், பிரயாணம்.

**கடகம்**
ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு, தன தானிய சேர்க்கை, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
நன்கொடை, எடுத்தகாரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, பிரபுத்தனம்

**கன்னி**
நிர்ப்பந்திக்கப்படுதல், பிரயாணம், முயற்சி தாமதம், பிதாசிந்தை.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு, பொருள் விரயம்.

**விருச்சிகம்**
மனோசௌக்கியம், கீர்த்தி, எடுத்த கருமங்கள் கைகூடும், தனலாபம்.

**தனுசு**
தடைப்பட்ட காரியம் கைகூடும், பிரயாணம், சுவாரஸ்யம், போசன சுகம்.

**மகரம்**
வியாபார நன்மை, குடும்பக் கவலை, அஜீரண ரோகம், காரிய தாமதம்.

**கும்பம்**
தன்னம்பிக்கை குறைவு, முயற்சி தாமதம், பணத் தட்டுப்பாடு, உடல்நலக் குறைவு.

**மீனம்**
கூட்டுமுயற்சி, பொருள் சேர்க்கை, நற்கீர்த்தி, கலந்துரையாடல்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வளவன்***

## ஜாதிக ஹெல உறுமய கட்சி

# எம்.பி. தாக்கப்பட்டதற்கு தேசப்பற்று அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய கதலுவ ரத்தின சீல தேரர் கடத்தப் படடு தாக்கப்பட்டதை தேசப்பற்று அமைப்பு வன்மையாகக கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, கடந்த திங்கட்கிழமை மொறட்டுவ பகுதியில் வைதது கடத்தப்பட்ட கதலுவ ரத்தின சல தேரர் இனந்தெரியாதோர்களால் மிகவும் கடுமையாகத்தாக்கப்பட்டிருந்தார். இவர் தற்போதைய ஜாதிக ஹெல உறுமய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான சங்கைக்குரிய கொலன்னாவை சுமங்கல தேரரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதிலிருந்து சங்கைக்குரிய கதலுவ ரத்தின சீல தேரர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டமைக்கு பின்னணியாக கொலன்னாவை சுமங்கல தேரரே இருந்துள்ளாா என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

இதற்கிடையே கதலுவ ரத்தின சீல தேரர் தற்போது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தன்னை விலக்கிக் கொள்வதற்கான இராஜினாமாக் கடிதத் தைக் கையளித்திருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் அவ்வாறு இராஜினாமா கடிதத்தை கையளித்திருப்பது உண்மையாக இருந்தால் தனது சுயவிருப்பின் பேரில் அதனைக் கையளித்திருக்கமாட்டார் என்றே கருதுகின்றோம். கொலன்னாவை சுமங்கல தேரரின் மிரட்டலின் அடிப்ப டையிலேயே அவர் இந்த இராஜினாமாக் கடிதத்தை கையளித்திருப்பார் என நாம் நம்புகின்றோம.

எனவே இந்த விடயம் தொடர்பாக பிரதமரும் ஜனாதிபதியும் அதிக கவனஞ் செலுத்தி விசாரணைகளை மேற கொள்ளவேண்டும் எனத் தேசியப்பற்று அமைப்பு கேட்டுள்ளது. இதேவேளை சங்கைக்குரிய கதலுவ ரத்தின சீல தேரர், தான் எவராலும் தாக்கப்படவில்லை எனவும் தான் கடத்தபட்டு தாக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தி உண்மைகதபுறப்பானது என்றும் தெரிவித்துள்ளாா். (60,10)

# வற்றாப்பளையில் தற்காலிக சந்தை

(மருதங்கேணி)

வற்றாப்பளையில் வீதியோரங்களில் வைத்து மரக்கறி, மீன விற்பனை செய்யப்பட்டு வந்ததைபடுத்து அப்பகுதியில் தற்காலிக சந்தையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகள,நுகர்வோர், பாவனையாளர்கள் நன்மை கருதி வற்றாப்பளை மாதர் சங்கத்தின அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச சபையினரும், கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் செயற்படுத்தலில் இச்சந்தை திறக்கப்பட்டுள்ளது. (4,35)

# யாழ்ப்பாணக் குடும்ப- சமூக கலாசார பண்பாட்டு

**தொலைக்காட்சியில் தொடராக இடம்பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப- சமூக கலாசார பண்பாட்டு உறவுகள் பலப்படுகின்றதா? பலவீனப்படுகின்றதா?**

*என்ற தலைப்பிற்கு "பலப்படுகின்றது" என்ற தலைப்பின் கீழ் சசீந்திரா தன் வாதப் பிரதி வாதத்தினை முன்வைக்கிறார்.*

விவாத அரங்கு

# உறவுகளைப் பலப்படுத்தும்

# தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்

சுன்னாகத்திலிருந்து சசீந்திரா

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் பலமாகத் தன் கால்களைப் பதித்ததொரு அம்சம் தொலைக் காட்சித் தொடர் நாடகங்களும் அது சார்ந்த ஏனைய விடயங்களும். இவ் அம்சத்தினால் பலர் தமது பிள்ளைகளையும், சமூகத்தின் பண்பாட்டு கலாசாரத்தினையும் பலவீனப்படுத்தி சீரழிக்கிறது என்று விசனங்கள் பேசிக் கொண்டே போகிறார்கள். இவ்வாறு பேசுகின்றவர்கள் பல விடயங்களை மறந்து விட்டார் போலும். இவர்கள் தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களிடமும், ஊடகங்களுக்கும் இதன் பாதிப்பைக் கூறி வருகிறார்களே தவிர இதனைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது தடுப்பதற்கோ முனையவில்லை. இதை விட்டு விட்டு தாமும் கூட இருந்தல்லவா தொலைக் காட்சித் தொடர்களையும், ஏனைய அம்சங்களையும் பார்த்துவிட்டு தம்மையே மறந்து விமர்சிக்கிறார்கள். ஒன்றின் பாதிப்பை உணர்ந்தால் நாம் தான் முதலில் அதிலிருந்து விலக வேண்டும். இதனை விடுத்து தாமும் கூட இருந்து இரசித்து விட்டு இடையில் ஏதாவது ஆபாசமான கட்டங்கள் வந்தவுடன் தமது பண்பாட்டு -கலாசாரப் புராணத்தினை பிதற்றத் தொடங்கி விடுவார்கள். அன்பான பெரியவரே! தொலைக் காட்சி நாடகத் தொடர்களோ அல்லது அது சார்ந்த ஏனைய அம்சங்களோ சமூகத்தினைப் பண்படுத்திக் கொள்ள வெளிப்படுத்தப்படுவதே தவிர அவற்றைப் பார்த்து விட்டு அனைவரும் பண்பாட்டையும் கலாசாரத்தினை கழற்றி விடுங்கள் என்ற நோக்கில் ஒளிபரப்பப்படவில்லை என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏன்? உதாரணமாக வேலன் ,விக்ரமாதித்தன், சக்திமான், ஜீபூம்பா மற்றும் ஏனைய அலைவரிசைகளில் இருந்து காட்சிப்படுத்தப்படுகின்ற குழந்தைகளுக்கான நாடகத்தொடரை நீங்களும் பார்த்திருப்பீர்கள். இவற்றில் இருந்து குழந்தைகள் எத்தனையோ பல விடயங்களைத் தமக்காக உள்வாங்குகிறார்கள். இக்குழந்தைகளின் பெற்றோர்கள் சொல்லிக் கொடுக்க மறந்த பல விடயங்களை இதன் மூலம் இருந்தல்லவா மிகவும் இரசனையுடன் உள்வாங்குகிறார்கள். இதனை விடுத்து தம்மை அவர்கள் இழிவு படுத்திக் கொள்ளவில்லையே. பள்ளிச் சிறார்கள் அண்மைக் கால பாடவிதான விதிகளுக்கேற்ப படித்துப் படித்துக் களைத்து விடும்போது சற்று ஓய்விற்காக-மன அமைதிக்காக அறிவுள்ளதான இக் காட்சித் தொடர்களைப் பார்க்கட்டுமே. இதனால் எந்த விதமான பாதிப்பும் நேர்ந்து விடாது. சரி இக்குழந்தைகளின் சமாச்சாரத்தினை விடுத்து, பெரியவர்களை எடுப்போம். நிஜ வாழ்வில் புரிந்து கொள்ள மறுத்த குடும்ப இரகசியங்கள் பலவற்றைத் இத் தொடர் நாடகங்களில் இருந்தாவது பெற்றுக் கொள்ளட்டும். பெரும்பாலான இருபாலாரும் தற்போது இதனைத் தான் கடைப்பிடித்து தமது வாழ்வில் வெற்றியையும் தேடிவருகின்றனர் என்றால் மிகையாகாது. ஏன் ஐயா? எப்போதும் **Negative** ஆகவே சிந்திக்கின்றீர்கள் சற்று **Positive** ஆகவும் சிந்தியுங்கள். ஓடிக் கொண்டிருக்கின்ற ரயில் தண்டவாளத்தில் தலையை வைத்து சாகத்தான் ஒருவன் அடம்பிடிக்கிறான் என்றால் அவனை நான் என்ன நீங்கள் கூட மறிக்க முடியாது. அது போலத்தான், இத் தொடர் நாடகங்களில் இடம்பெறுகின்ற எமக்கொவ்வாத விடயங்களை தமதாக்கிக்கொண்டு சிலர் எம் யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாட்டு கலாசாரத்தினை சீரளிக்கத்தான் வேண்டும் என்று கங்கணம் கட்டியலைந்தால், நாம் அனைவரும் அவர்களை ஏதும் செய்ய முடியாது. மாறாக இவர்கள் போன்றவர்களைப் பார்த்து பெருமைப்படமாட்டோம். நிச்சயமாக காறித் தான் துப்புவோம்.

அன்னம் பாலில் கலந்த நீரை வேறாக்கி பாலை மட்டும் அருந்துவது போல, தொலைக்காட்சி நாடகங்களில் உள்ள நல்ல விடயங்களை எமதாக்கிக் கொண்டு ஏனைய தேவையற்ற விடயத்தினால், எமது சமூகம் சீரழிந்து பலவீனப்படுத்தப் பட்டு விடும் என்று எண்ணிக் கைவிட்டு விடலாம்.

எம் சமூகத்து இருபாலாரும் இவ் தொடர் நாடகங்களால் எம் வாழ்க்கை பலவீனப்பட்டு விடுமே என்று எண்ணி விட்டிருந்துவிடாது,

> **"குங்குமம், காவியாஞ்சலி, மெட்டிஒலி, நதி எங்கே போகிறது, மருமகள், சித்தி, பெண்ணே! பெண்ணே!, மறுபக்கம், மைதிலி, ஆனந்தம், கோலங்கள்.... போன்ற தொடர்களினைப் பார்ப்பதன் மூலம் நல்ல பலவிடயங்களை எமது நிஜ வாழ்விலும் பயன்படுத்திக்கொள்ளலாம்.**

"குங்குமம், காவியாஞ்சலி, மெட்டிஒலி, நதிஎங்கே போகிறது, பெண்ணே! பெண்ணே!, மறுபக்கம்,ஆனந்தம், கோலங்கள், மருமகள்... போன்ற தொடர் நாடகங்களைப் பார்த்துநல்ல பல விடயங்களை உங்கள் ஒவ்வொருவரினது நிஜ வாழ்க்கையிலும் பயன்படுத்தினால் நிச்சயமாக நல்லதொரு இனிய குடும்பமாய் இக் குடும்பங்கள் சேர்ந்து நல்லதொரு சமூகத்தினைக் கட்டியெழுப்ப முடியும்.

எனவே தொலைக் காட்சியில் தொடராக இடம்பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக்குடும்ப-சமூக கலாசாரப் பண்பாட்டு உறவுகள் அனைத்தும் பலப் படுகிறது. என்று ஆணித்தரமாய் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## தேர்தலில் தோல்வியடைந்தவர்களை பதவிகளில் அமர்த்த வேண்டாம் ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களை பிரதான அரச நிறுவனங்களில் பதவிவகிக்க அனுமதிக்க வேண்டாமென ஜனாதிபதிக்கு ஜே.வி.பி.கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களை பிரதான அரச நிறுவனங்களில் முக்கிய பதவி வகிக்க அனுமதிக்க வேண்டாமென தாம் ஏற்கனவே ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியதாகவும், அவர் தமது கோரிக்கையை மதித்துச் செயற்படவில்லை எனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பலர், துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சர் மங்கள சமரவீரவினால் துறைமுக கப்பல் துறை அமைச்சின் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறித்தே ஜே.வி.பி இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாண முஸ்லிம் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா விமான நிலைய மற்றும் கப்பல் துறையின் முக்கிய பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## *கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன*

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத்தின் பல பாகங்களிலும் தற்போது மனித நேயக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக முல்லைத்தீவு பொது மயானத்தில் . இந்தப்பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், தற்போது கரைதுறைபற்று ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் நிலையத்திற்கு அருகாமையிலும் கண்ணிவெடி அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (43)

## மருத்துவமுகாம்

(தாவடி)

மானிப்பாய் லியோ கழகத்தின் அனுசரணையுடன்,யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் குழுவினரால் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டது. இதில் சலரோகம்,இரத்தஅழுத்தம் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன.

நூற்றுக்கும் அதிகமான நோயாளிகள் இதில் பங்குபற்றி நன்மையடைந்தனர். யாழ். போதனா சாலை வைத்திய கலாநிதி கே. பாலசுப்பிரமணியமும் இம் மருத்துவ முகாமில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (117)

## வருடாந்தஉற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 24ஆம்திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இவ்ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர் வரும் ஜூன் மாதம் 16,17ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (8)

**அன்பு வாசகர்களே!**

**ஊர்த்தரிசனப் பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது. உங்கள் ஊரில் நிலவும் நிறை குறை களை எழுதி, உங்கள் ஊருக்குப் புத்துயிர் அளியுங்கள். உங்கள் ஆக்கங்களைப் புகைப்படங்களுடன்,**

**ஊர்த்தரிசனம்**
**வலம்புரி**
**இல.15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.**

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் ~04

**மாணவர் முழுப்பெயர்:** ........................................

**பாடசாலை முகவரி :** ........................................

**வீட்டின் முகவரி :** ........................................

*மாணவர்களே! உங்கள் விடைகளை 24.05.2004 இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.*

**வலம்புரி**
**கல்விப்பகுதி,**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக் கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.**

**மீண்டும் உங்கள் வலம்புரியில்**

**விவாத அரங்கு**

**விடயம்**

**தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்**

**பலப்படுகின்றது** **பலவீனப்படுகின்றது**

***உங்கள் கருத்துக்களை***

**விவாத அரங்கு**
**வலம்புரி**
**இல.15, வெள்ளாந்தெரு**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

# ஆஸியுடனான போட்டியில் சிம்பாப்வே வெற்றிபெற வேண்டியது அவசியம்

## தவறின் டெஸ்ட் அந்தஸ்துப் பறிபோகும்

சிம்பாப்வே-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற வுள்ள டெஸ்ட் தொடரானது சிம் பாப்வே அணிக்குப் பெரும் பலப் பரீட்சையாக அமையவுள்ளது.

இநத டெஸ்ட் போட்டித் தொட ரில் சிம்பாப்வே அணி தோல்வி யுற்றால் அவர்களது டெஸ்ட் அந் தஸ்து பறிக்கப்படக் கூடிய நிலை ஏற்படும் என சர்வதேச கிரிக்கெற் பேரவை எச்சரித்துள்ளது.

லண்டலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தொலைபேசிக் கலந் துரையாடலின் போது இந்தத் தீர் மானத்தை சர்வதேச கிரிக்கெற் பேரவை எடுத்துள்ளது.

சிம்பாப்வே கிரிக்கெற் கழக அதிகாரிகளுடன் பல்வேறு விட யங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்த சர்வதேச கிரிக்கெற் பேரவை நேற்று முன்தினம் அழைப்பை விடுத் திருந்தது. எனினும் அதனை ஏற் காமல் சிம்பாப்வே கிரிக்கெற் கழ கம் நழுவியது.

இதனையடுத்து இந்தத் தீமானத திற்கு சர்வதேச கிரிக்கெற் பேரவை வந்துள்ளதாக பேரவையின் அதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார். சிம்பாப்வே ‘ஏ’ அணிக்கும், அவுஸ் திரேலிய அணிக்கும் இடையில் கராரேயில் அண்மையில் நடை பெற்ற இரண்டுநாள் கிரிக்கெற் போட்டி வெற்றிதோல்வியின்றி முடி வடைந்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே ‘ஏ’ அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 151ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக் கெற்றுக்களையும் இழந்து 448 ஓட்டங்களைப்பெற்றது.

(61)

# ஹொக்கிப் போட்டியில் இந்தியா தோல்வியடைந்தது

ஜப்பானில் நடைபெற்ற 4 நாடு களுக்கிடையிலான ஹொக்கிப் போட் டியின் இறுதிச் சுற்றில், தென் கொரியா 6-1என்ற கோல்கணக் கில் இந்தியாவுக்குத் தோல்வியைத் தந்தது.

பிரின்ஸ் டக்கமடோ கோப்பைக் கான இப்போட்டி ஜப்பானின் கி.்.புவில கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.


ஆசிய விளையாட்டுப் போட்டி யில் தங்கம் வென்ற அணி தென் கொரியா என்பது குறிப்பிடத்தக் கது.

தென்கொரியாவின் இசோங் சோன் 16,17,40-வது நிமிடத்தில் கோல் அடிததார். ஹுவாங் சோங்- ஹியோன் 25-வது, சோசோங்ஹோ 57வது, யுகோசிக் 59வது நிமிடத் திலும் கோல் அடித்தனர்.

சந்தீப் மைக்கேல் ஒருகோல், இந்தியத் தரப்பில் சந்தீப் மைக் கேல் 28வது நிமிடத்தில் அணி யின் ஒரேஒரு கோலை அடித்தார்.

முனனதாக ஜப்பானில் உள்ள கி.்.புவில் திங்கட்கிழமை நடை பெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் ஜப்பானை 5-2என்ற கோல் கணக் கில் கொரியா தோற்கடித்தது.

(61)




அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற அடிலெயிட் கிண்ணத் திற்கான குதிரைப் பந்தயப் போட்டியில் வெற்றிபெற்ற போல்கட் (வலது) என்பவரும் பிப் கின்னைச் சேர்ந்த லூக்கும் போட்டியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காண் கிறீர்கள்.

# எவ்.ஏ.கிண்ண அரையிறுதிப் போட்டிகள் சுகததாஸ அரங்கில் இன்று நடைபெறும்

இலங்கை கால்பந்தாட்டச் சம் மேளனத்தினால் நடாத்தப்பட்டுவ ருகின்ற எவ்.ஏ.கிண்ண கால்பந் தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை யிறுதியாட்டங்கள் இன்று சுகத தாஸ விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளன.

இன்று மாலை 5.00மணிககு ஆரம்பமாகவிருக்கின்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் நடப்பு எவ.ஏ.கிண்ண சம்பியனான றினோன் கழகத்தை, பிறீமியர் லீக் நடப் புச் சம்பியனான களுத்துறை புளூஸரார் கழகம் எதிர்த்தாடவுள் ளது.

இதனைத் தொடர்ந்து நடை பெறவிருக்கின்ற இரண்டாவது அரை யிறுதியாட்டத்தில் நடப்பு சுப்ப லீக் சம்பியனான இரட்ணம் கழ கத்தை நீர்கொழும்பு யுப்பீற்றர்ஸ் கழகம் எதிர்த்தாடவிருக்கின்றது.

இன்றைய போட்டியை கண்டு களிப்பதற்கு ஏராளமான பார்வை யாளர்கள் சுகததாஸ விளையாட் டரங்கிற்கு வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (68)

# 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் நகரங்களின் விபரம் அறிவிப்பு

2012ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதற்கான நகரங்களைத் தெரிவுசெய்வதில் இறுதி நேரத்தில் தெரிவுசெய்யப் பட்ட 5 நகரங்களின் பெயர்கள் நேற்று வெளியிடப்பட்டன.



பனிச் சறுக்கல் போட்டியில் கல்காறி பிலேம்விற்கு எதிராக மேற்கு மாநாட்டின் இறுதியாட்டத்தில் பங்குபற்றிய வின் சன்டாம் கெவுஸ் பேரட்டியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.


லண்டன், மட்ரிட், மொஸ்கோ, நியூயோர்க், பரிஸ் ஆகிய 5 நக ரங்களுமே தெரிவுசெய்யப்பட்ட நகரங்களாகும்.

இதுவரை ஒலிம்பிக் போட்டி நடத்தும் பட்டியலில் இடம்பிடித்தி ருந்த லெப்ஸிக், கவானா, இஸ் தான் புல், றியோடி யெனரோ ஆகிய 4 நகரங்களும் தெரிவில் இருந்து நேற்று முன்தினம் நீக் கப்பட்டன.

தற்போது லண்டன், மட்ரிட், மொஸ்கோ, நியூயோர்க், பரிஸ் ஆகிய 5நகரங்களே இடம்பிடித் துள்ளன. எனினும் 2012ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டியை நடத்தும் நாடு எதுவென்பது 2005ஆம் ஆண்டு யூலை மாதமே அறிவிக்கப்படும் என்று சர்வதேச ஒலிம்பிக் சபை தெரிவித்துள்ளது.

நகரங்களின் உட்கட்டமைப்பு வசதிகள்,போக்குவரத்து,பாதுகாப்பு மற்றும் போட்டியை நடாத்துவதற் கான அரசாங்க ஆதரவு போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டே இந்த நகரங்களின் பெயர்கள் அறி விக்கப்பட்டுள்ளன.

(61,68)



ஜேர்மனியில் நடைபெற்றுவரும் ஏ.ரி.பி.டென்னிஸ் உல கக்கிண்ணப் போட்டியில் ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த கஸ்ரன் கோடியோ போட்டியின் போது.

# விளையாட்டுச் செய்திகள்

# லண்டனில் சிகிச்சைபெற சொயிப் அக்தர் திட்டம்

விலாப் பகுதியில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக அவதியுற்று வரும் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் லண் டனுக்குச சென்று சிகிச்சை பெறத் திட்டமிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான மூன்றா வது மற்றும் இறுதி கிரிக்கெற் டெஸ்ட் போட்டியின்போது அக் தருக்கு விலாவில் காயம் ஏற்பட் டது. அதைத் தொடர்ந்து அவர் சிகிச்சை பெற்றுக்கொண்டாலும் இன்னும் முழுமையான பலன் கிடைக்கவில்லை.

ஆகவே லண்டனில மருத்துவ நிபுணரின் ஆலோசனையைப் பெறத் திட்டமிட்டுள்ளார்.

இங்கிலாந்தில் கிளாமர்கான் அணிக்கு எதிராகத் தொடங்கவுள்ள போட்டியில இருந்து தனக்கு ஓய்வு அளிக்க வேண்டும் என்று கிரிக் கெற் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

முன்னதாக இங்கிலாந்தில் சாமர்செட் மற்றும் வொர்செஸ்ட் வயர் அணிகளுக்கு எதிராக [illegible] அணியின் சார்பில் ஒருநாள் [illegible] டிகளில் அக்தர் விளைய[illegible]ளார்.

இனிவரும் ஆண்டில் பாகிஸ் தான் அணி பல முக்கிய போட் டிகளில் ஆடவுள்ளது. இப போட் டிகள் எதையும் தவறவிடகூடாது என்று கருதுகிறேன். தாயக அணிக்கு பாதிப்பு எதுவும் ஏற்படக்கூடாது என்ற ஆதங்கத்தில் விரைவாகக் குணமடைய விரும்புகிறேன்.

முன்னதாக 3அல்லது 4வார ஓய்வுக்குப்பின் ஆட்டத்தில் இறங் கலாம் என்று மருததுவ ஆலோ சனை தரப்பட்டது. மூன்றுவார ஓய்வு போதும் என்று நினைத்து களத் தில் இறங்கினேன். அது போதாது என்று இப்போதுதான் தெரிகிறது எனத் தெரிவித்துள்ளார் அகதா். (61)

# ஆடவர் இறகுப் பந்திற்கான வெற்றி கோப்பையை சீனா கைப்பற்றியது

இந்தோனேசியாவில் உள்ள ஜகார்த்தாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இறுதிப் போட் டியில் சீனக் குழுவினர் 3-1என்ற கணக்கில் டென்மார்க் குழுவைத் தோற்கடித்தனர்.

இத்துடன் 5முறை சீனா பட் டம் வென்றாலும் 1990க்குப் பின் வெல்லவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் நடப்புச் சம்பியன் இந்தோனேசியாவை அதிர்ச்சித் தோல்வியடையச்செய்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய டென்மார்க், இம்முறையும் பட்டம் வெல்ல முடி யாமல் பெரிதும் ஏமாற்றம் அடைந் தது.

இப் போட்டியைத் தவிர்த்து 1949முதல் 6முறை இறுதிச் சுற் றுக்கு முன்னேறியுள்ளது டென் மார்க். ஆனால் 2 முறை மலேசி யாவிடமும் 4 முறை இந்தோனே சியாவிடமும் தோல்வியைத் தழு வியது.

மகளிருக்கு வழங்கப்படும் உபேர் கோப்பையை சீனாவே கைப்பற் றியது குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டியில் தென்கொரியாவை தோற்கடித்தது சீனா. அடுத்த போட்டி (உபேர் கோப்பை மற்றும் தாமஸ் கோப்பை) டோக்கியோவில் 2006ல் நடைபெறவுள்ளது.

# முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு சோனியாவுக்கு உருக்கமான வேண்டுகோள்

## கட்சித் தலைவர்கள், தொண்டர்களின் உருக்கமான கூட்டுக் கோரிக்கை

(புதுடில்லி)

பிரதமர் பதவியைத் தாம் ஏற்கப்போவதில்லையென்று காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி



முடிவெடுத்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், புதுடில்லியில் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றது.

புதிய தலைவர் யார் என்பதை சோனியா காந்தி வெளியிடுவார் எனவும் பிரதமர் பதவியை ஏற்க முடியாததற்கான காரணத்தையும் சோனியா காந்தி எடுத்துரைப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சோனியா காந்தியின் இந்த முடிவு, கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட அதிக வாய்ப்புள்ளவராகக் கருதப்படும் டாக்டர் மன்மோகன் சிங், தி.மு.க. தலைவர் கருணாநிதியையும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஹர்ஸிசன்சிங் சுர்ஜித்தையும் சந்தித்து சோனியா காந்தியின இந்த முடிவைத் தெரிவித்தார்.

தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத்பவாருக்கும் லோக் ஜனசகதித் தலைவர் ராம்விலாஸ் பாஸ்வானுக்கும் சோனியா காந்தியின் இந்த முடிவை காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்ஸிசன்சிங் சுர்ஜித்தின் இல்லத்தில் நடைபெற்ற முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங், சமாஜ்வாதக் கட்சியின் பொதுச் செயலாளர் அமர்சிங், மூத்த காங்கிரஸ் தலைவர்கள் மன்மோகன் சிங், அர்ஜூன் சிங், குலாம் நபி ஆஸாத் உட்படப் பலர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் பிற்பகல் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமைச் சந்தித்து மத்தியில் ஆட்சி அமைப்பது தொடர்பாகப் பூர்வாங்க ஆலோசனை நடத்தினார்.

பிற்பகல் 12.15 மணிக்கு குடியரசுத் தலைவரை, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மன்மோகன் சிங், பிரணாப் முகர்ஜி ஆகியோருடன் சோனியா காந்தி சந்தித்தார்.

20 நிமிடச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய சோனியா காந்தி, மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு அமைவதற்கு எந்தெந்தக் கட்சிகள் வெளியிலிருந்தும், அமைச்சரவையில் பங்கேற்கவும் ஆதரவு தெரிவித்திருக்கினறனர் என்பது குறித்து குடியரசுத் தலைவர் கேட்டுத தொரிந்து கொண்டதாகக் கூறினார்.

இது முதற்கட்டச் சந்திப்பு என்றும் கூட்டணிக் கட்சிகளின் கடிதங்களுடன் மறு நாள் குடியரசுத்



தலைவரைச் சந்திக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

சோனியா காந்தி பிரதமராவதைத் தடுக்க தேசிய ஜனநாயக கூட்டணி வஞ்சனையான முயற்சியை மேற்கொண்டுள்ளது என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின மக்களவைத் தலைவர் சோமநாத் சட்டர்ஜி தெரிவித்திருக்கிறார்.

மக்களின் தீர்ப்பை ஏற்க மறுத்துச் சோனியா காந்திக்கு எதிராக, பிரசாரங்களில் பா.ஜ.க.ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டார்.

சோனியா காந்தியின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாதிருப்பதால அவர் பிரதமராவதை அவரது மக்களான பிரியங்கா காந்தி, ராகுல் காந்தி விரும்பவில்லை என்றும் சட்டர்ஜி கூறினார்.

பிரதமர் பதவியை ஏற்கப் போவதில்லை என்று சோனியா காந்தி அறிவித்ததும் காங்கிரஸ், கூட்டணி தலைவர்களிடமும் தொண்டர்களிடமும் பெரும் ஏமாற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

அரசியல் தலைவர்கள் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சோனியாவின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும், அவரை நம்பிவாக்களித்த மக்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்த வேண்டாமென்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

கட்சித் தொண்டர்கள் சோனியா காந்தியின் இல்லத்தின் முன் கூடி கண்ணரும் கம்பலையுமாக அவரது முடிவை மாற்றும்படி கோஷமெழுப்பினர்.

பாரதிய ஜனதாக் கட்சியின் புதுடில்லி தலைமை அலுவலகத்தின் முன் கூடிய தொண்டர்கள் பா.ஜ.க.வின் வஞ்சகச் செயலுக்கெதிராக ஆக்ரோஷத்துடன் கோஷமெழுப்பினர். (து)



**வடசென்னையில் புளியந் தோப்பு, ஓட்டேரி, பட்டாளம் ஆகிய இடங்களில் கொலரா நோய் பரவியுள்ளது. தற்போது 250 பேர் கொலரா நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த திங்கட்கிழமை மட்டும் 58 பேர் தண்டையர்பேட்டை தொற்றுநோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுகாதாரமற்ற குடிநீரே கொலரா நோய்கதுக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.**

## இந்தியச் செய்திகள்

# பிரதமர் பதவியை ஏற்பதற்கு மனச்சாட்சி இடம் தரவில்லை

## கட்சியினருக்கு சோனியா பதில்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் பதவியைத் தான் ஏற்கப் போவதில்லையென்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி முடிவெடுத்ததாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து அவருடைய வீடு இருக்கும் ஜன்பத் சாலையிலும், காங்கிரஸ் கட்சியின் அலுவலகம் இருக்கும் அக்பர் தெருவிலும் நூற்றுக் கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் அவர் முடிவைத் திரும்பப் பெறுமாறு கோஷம் எழுப்பியும் ஆர்ப்பாட்டம் செய்தும் பலவிதமான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.



**மத்தியில் காங்கிரஸ் தலைமையில் அமையவிருக்கும் கூட்டணி அரசில் பங்கேற்பது குறித்து ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக கூட்டம் கடந்த சனிக்கிழமை சென்னையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து தி.மு.க. தலைவர் கருணாநிதி ஞாயிற்றுக்கிழமை டில்லி சென்று சோனியாவிடம் தமது ஆதரவுக் கடிதத்தை அளித்தார். ஆனால் அமைச்சரவையில் சேர அவகாசம் தேவை என்று கேட்டுள்ளார்.**

சிலர் தீக்குளிக்கவும், சிலர் துப்பாக்கியால் தம்மைத் தாமே சுட்டுக்கொள்ளவும் முயன்றார்கள்.

இவர்கள் இப்படிப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த அதே சமயம், மாலை 7 மணிக்கு நாடாளுமன்ற மைய மண்டபத்தில் காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் பேசிய சோனியா காந்தி தமது முடிவை முறையாக அறிவித்தார்.

“ஒரு விஷயத்தில் நான் எப்போதுமே தெளிவாக இருந்தேன். இன்று நான் இருக்கும் நிலையில், நான் இருக்க நேருமானால், என் உள்ளுணர்வு மனச்சாட்சியின் குரலைக் கேட்டு நடக்கவேண்டுமென்பதில் நான் தெளிவாக இருந்தேன். இன்று அந்த மனச்சாட்சியின் குரல் இந்தப் பதவியை நான் அடக்கத்தோடு மறுதலிக்க வேண்டுமென்று எனக்குக் கூறுகிறது” என்றார் சோனியா காந்தி.

அவர் இப்படிச் சொன்னதும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முடிவுக்கு எதிராக ஒரே குரலில் கோஷத்தை எழுப்பினார்கள்.

ஆனால் சோனியா காந்தி தமது முடிவில் உறுதியாக இருப்பதாகக் கூறினார்.

“எனது இந்த முடிவை ஏற்குமாறு உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். எனது முடிவைத் திரும்பப் பெறமாட்டேன் என்பதையும் நீங்கள் உணரவேண்டும்” என்றார் சோனியா காந்தி.

உடனே நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பா.ஜ.கவின் மிரட்டலுக்கு நீங்கள் பணிய வேணடாம் என்று கோஷமிட்டார்கள்.

இதற்குப் பதிலளித்த சோனியா காந்தி யாரிடமிருந்தும் எனக்கு மிரட்டல் எதுவும் வரவில்லை. இது எனது உள்ளுணர்வின் குரல்; மனச் சாட்சியின் முடிவு என்றார்.

இந்த முடிவுக்கான காரணத்தை அவர் நேரடியாகக் கூறாவிட்டாலும் தற்போது இந்தியாவுக்கு மதச் சார்பற்ற, உறுதியான, நீடிக்கக்கூடிய நிலைத்த ஆட்சி அமைப்பது தான் தம்முன் உள்ள முதல் கடமை என்று சோனியா காநதி கூறியதன் மூலம் அதற்குத் தான் பிரதமராகப் பதவி ஏற்பது தடையாக இருக்கும் என்று அவர் கருதுவதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

சோனியா காந்தியின் முடிவைத் திரும்பப் பெறுமாறு கர்ங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவராக நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார்கள்.

சோனியா காந்தி இப்படியொரு முடிவை எடுத்துவிட்டதாக நேற்று முன்தினம் மாலையே ஊகங்கள் செய்திகளாக வெளியாயின. ஆனால இவை வெறும் வதந்திகள் என்று நேற்று முன்தினம் இரவே மன்மோகன் சிங் தெளிவபடுக்கியதைத் தொடர்ந்து சோனியா காந்தி பிரதமராகப் பதவி ஏற்பது உறுதி என்றே அனைவரும் நம்பினார்கள்.

அதை உறுதிப்படுத்தும் விதமாக, மறுநாள் காலை குடியரசுத் தலைவரைச் சந்தித்த சோனியா காந்தி, ஆட்சி அமைப்பது குறித்து ஆரம்ப கட்டமாகப் பேசி வருவதாகவும் மீண்டும் அவரைச் சந்திக்கவிருப்பதாகவும் கூறினார்.

அடுத்த இரண்டு மணி நேரத்தில் சோனியா காந்தி பிரதமர் பதவியை ஏற்கப் போவதில்லை என்கிற செய்திகள் கசியத் தொடங்கியதைத் தொடர்ந்து காங்கிரஸ் தொண்டர்கள் சோனியாவின் வீட்டின் முன் குழுமி ஆர்ப்பாட்டங்களைச் செய்யத்துவங்கினார்கள்.

அங்கே ஆர்ப்பாட்டம் நடத்திய பெரிய குளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.எம்.அருணுடன் பேசிய போது,

நாங்கள் வாக்குச் சேகரிக்கச் செல்லும் போது அன்னை இந்திரா காந்திக்குப் பிறகு ஒரு பெண்மணி - சோனியா காந்தி பிரதமராக வர வேண்டும், இதற்கு நீங்கள் கை சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோரிய போது எல்லோரும் ஒன்று கூடி வந்து “நாங்கள் கைக்குத்தான் வாக்களிப்போம” என்று சொன்னார்கள். இது காங்கிரஸ் கட்சிக்கு மாத்திரமல்ல, சோனியா காந்திக்காகவும் அளித்த வாக்கு என்றார்.

அவருடைய ஆவலும், சோனியா காந்தி அவருடைய முடிவைத் திரும்பப் பெறவேண்டுமென்று பேராட்டம் நடத்திவரும் காங்கிரஸ் தொண்டர்களின் எதிர்பார்ப்பும் நிறைவேறுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். (து)

# பொலிஸ் வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜனாதிபதி சட்டத்தரணி எடுத்துரைப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் வெற்றிடங்கள் நிலவுவதனாலேயே மக்கள் செய்யும் முறைப்பாடுகளை ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளதாக தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான ரஞ்சித் அபேசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தில் அதிகளவு வெற்றிடங்கள் காணப்படுவதால் நாட்டின் சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது.

எனவே பொலிஸ் திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடைமுறையில் உள்ள சட்டங்கள் தடையாக இருப்பின் புதிய சட்டங்கள இயற்றப்பட வேண்டும். இது பாராளுமன்றத்தின் கடமையாகும்.

பொது மக்களின் பிரச்சினைகளை உரிய வகையில் ஆராய பொலிஸாருக்கு உரிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அதிகாரம் இருப்பினும் அதனைப் பயன்படுத்தக் கூடிய பதவிகளில் வெற்றிடம் நிலவுகிறது. இது உடனடியாக நிரப்பப்பட வேண்டும். பொலிஸாரை சுயாதீனமாக இயங்கச் செய்வதே பொலிஸ் சேவை ஆணைக் குழுவின் முக்கிய நோக்கமென ரஞ்சித் அபேசூரிய மேலும் தெரிவித்துள்ளார் (18)

# நோர்வேத் தூதரகத்திற்கான பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது

கடந்த திங்கட்கிழமை இனந் தெரியாதோரால் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் கல்வீச்சுத் தாக்குதலுககு உள்ளானதையடுத்து அங்கு தற்போது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதே தினம் நோர்வே நாட்டின் சுதந்திர தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையேயான பேச்சுக்களில் நோர்வே அனுசரணையாக செயற்பட்ட காலத்திலிருந்தே இவ்வாறான பல செயல்கள் நோர்வேத் தூதரகம் முன்பு தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிங்கள இனவாதிகள் சிலர் நோர்வே அனுசரணையாளர்கள் தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள் எனக் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றிய கலந்துரையாடல் வெள்ளியன்று

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

அரசாங்க சேவைகள் தொழிற் சங்க சம்மேளனத்தின் வேண்டுகோளின் பேரில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கலந்துரையாடலுக்கு பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தலைமை தாங்கவுள்ளார்.

அரசாங்க சேவைகள் தொழிற் சங்கக் குழுவின் அமைப்பாளர் டபிள்யூ எச்.பியதாஸ இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

அரசதுறை ஊழியர்களின் முக்கிய கோரிக்கைகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

முக்கியமாக சுகாதாரத்துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடு நீக்கப்பட்டது போல, அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளும் விரைவில் நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு அறிவிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (60,10)

# ஹக்கீம் மீதான விசாரணையை துரிதப்படுத்துகிறது ஸ்ரீ.மு.கா.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பான 'விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் அக்கட்சி ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாக 5 பேரைக் கொண்ட விசாரணைக் குழுவொன்றினை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமித்துள்ளது.

இக்குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஷின் தலைவர் ரவூப் ஹக்கீம், இக்குற்றச்சாட்டைச சுமத்திய பெண்ணை கடந்த இரண்டு வருடங்களாக தனக்குத் தெரியுமெனக் குறிப்பிட்டுள்ளதுடன், தனக்கும் அப்பெண்ணுக்கும் இடையில் எதுவித பாலியல் தொடர்புகளும் இருக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறிலங்கா அரசாங்கத்தின் பங்களிப்புடனேயே தம் மீது இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படடுள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ள இத்தகைய குற்றச்சாட்டுக்கள், அக்கட்சிக்குள் பிளவுகளைத் தோற்றுவிக்க வழிகோலும என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (8)

# தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வின்றேல் உயிர், உடமைச் சேதங்களைத் தவிர்க்கமுடியாது

## அமைச்சர் விதாரண எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சிங்களத்தை மட்டும் அரச கருமமொழியாகப் பிரகடனப்படுத்தினால் நாட்டில் இரத்த ஆறு ஓடுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்னர் சமஜவாதக்கட்சி கூறியதை அன்றைய அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்ளாததாலேயே நாடு இன்று பல சிக்கல்களுக்கு முகமகொடுக்கிறது என விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண் தெரிவித்துள்ளார்.

சிங்களமும், தமிழும் அரச கரும மொழியாக்கப்பட வேண்டும். அவை இரண்டுக்கும் சமநிலை வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் நாடு பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்குமென சமஜவாதக்கட்சி அன்றே எச்சரித்திருந்தது. இதனை அன்றைய அரசியல்வாதிகள் ஏற்கவில்லை.

இதனாலேயே நாடு இன்று இக்கட்டான நிலைக்குள் சிக்கியுள்ளது. எனவே இன்று நாம் தமிழரின பிரச்சினைக்குத் தர்வு கண்டேயாகவேண்டும். இல்லையேல் ஏற்படப் போகும் உயிர்ச்சேதங்களும், உடமைச் சேதங்களும் தவிர்க்க முடியாது போவதுடன் பொருளாதார முன்னேற்றமும முடக்கப்பட்டுவிடும் எனவும் அமைச்சர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார். (4-121)

# இளைஞர் தினத்தைக் கொண்டாட யாழில் விரிவான ஏற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நாடளாவிய ரீதியில் நாளை மறுதினம் இளைஞர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இதனை ஒட்டி யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் இளைஞர் யுவதிகளின் பரந்துபட்ட பங்களிப்பை நல்கக்கூடிய திட்டங்களை செயற்படுத்தவுள்ளது. யாழ்மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளனம் பிரதேச இளைஞர்கழக சம்மேளனங்கள், இளைஞர் கழகங்கள் என்பவறறுக்கு இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, கரவெட்டி, சண்டிலிப்பாய், சங்கானை, வலி. வடக்கு, வலி.தெற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் சிரமதான இயக்கம், மர நடுகைத்திட்டம், சுகாதார சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உடுவில், சாவகச்சேரி, சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 06 மாத கால அளவைக் கொண்ட ஆங்கில மொழிப்பயிற்சி நெறிகளும் இத்தினத்தை ஒட்டி ஆரம்பித்துவைக்கப்படும்.

மேலும், யாழ்.நல்லூர் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனங்களால் சினேகபூர்வ கரப்பந்தாட்ட, மென்பந்தாட்டப் போட்டிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (4)

## அஞ்சல் மா அதிபரின்

# அனுமதி இன்மையால் தபாலக திறப்பில் தாமதம்

(பொன்னாலை)

யாழ.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முற்றாக அழிந்துபோன யாழ்.பிரதம தபாலக வேலைகள் யாவும் பூர்த்தியடைநத நிலையிலும் மக்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கப்படவில்லை.

சுமாா 65 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதம தபாலகக் கட்டடம் முன்னா இருந்த இடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

எனினும, இதனை மக்கள் பாவனைக்குத திறப்பதற்கு அஞ்சல் மா அதிபரின் உத்தரவு இதுவரை கிடைக்காமையே திறந்துவைகப்படாமைக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (4,49)

# வடமேல் மாகாணசபையின் புதிய அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையின் புதிய அமைச்சர்கள் நேற்றுமுன் தினம் ஆளுநர் தர்மதாஸ வன்னியாராய்ச்சி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

முதலமைச்சர் அத்துல விஜய சிங்க, நெடுஞ்சாலைகள் போக்குவரத்து, மனிதவளம், கல்வி மற்றும் நீதியமைசசராகவும்,

சுகாதாரம், தேசியவைததியம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக நிறஞ்சன் விக்கிரமசிங்கவும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சராக அடி விமலதாசவும், மீன்பிடி கூட்டுறவு கிராமிய கைத்தொழில் அமைச்சராக அன்ரன் விக்டர் பியன்வலவும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

சமூக நலன்புரி சிறுவர் பாதுகாப்பு அமைச்சராக பியசிறி ராமநாயக்க பதவியேற்றார். (61,18)

## கடும் எதிர்ப்புக்களின் மத்தியில்

# ஹெல உறுமய எம்.பியின் பதவி விலகல் கடிதம் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின பாராளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய கத்தாலுவேரத்தின சீல தேரர், தம்மைச் சந்தித்து பதவி விலகல் கடிததத்தை தம்மிடம் சமர்ப்பிததுள்ளதாகப் பாராளுமன்ற சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது சபாநாயகர் அங்கு உரையாற்றியபோதே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய கத்தாலுவேரத்தின சீலதேரர், சொந்த முறையில் தாமாகவே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்றே நான் கருதுகின்றேன்.

எனெனில், கத்தாலுவேரததின சீலதேரர் ஜாதிக ஹெல உறுமய பாராளுமனற உறுப்பினர் ஒருவரால் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்தியை முற்றாக மறுத்துள்ளார்.

இதனால் நான் அவரது இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் இது தொடர்பாக பொலிஸ்மா அதிபரிடமும் தெரிவித்துள்ளேன் என்றார்.

இதேவேளை, கத்தாலுவே ரத்தின சீல தேரரின் பதவி விலகல் கடிதத்தை சபாநாயகர் எற்றுக்கொண்டதற்கு பாராளுமன்றில் ஆளுங்கட்சி தரப்பில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி, ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினாகளான விமல் வீரவன்ச ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி இராஜரட்ட அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன ஆகியோர் சங்கைக்குரிய கத்தாலுவேரத்தின சீலதேரரின் பதவி விலகல் கடிதத்தை சபாநாயகர் எற்றுககொள்ளக்கூடாது என வலியுறுத்தினார்கள்.

ஆனால் சபாநாயகர் கத்தாலுவேரத்தின தேரரின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டார். (60,10)

# அரியாலையில் மதிவெடி அகற்றும் பணிகள் துரிதம்

(கொழும்பு)

அரியாலை சித்திவிநாயகர் ஆலயச் சூழலில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் மீள்குடியமர்விற்கான தேவையை கருத்தில்கொண்டே 'ஹலோறரெஸ்ட்' மதிவெடிகள் அகற்றும் படையணியினர் இங்கு துரித நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள படையினரால் கைவிடப்பட்ட பகுதிகளிலும் இத்தகைய மதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (4,51)

# அமெரிக்க அதிபரும் பிரிட்டிஷ் பிரதமரும் பக்தாத்துக்கு திடீர் விஜயம்

(லண்டன்)

ஈராக்கில் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவ சர்ச்சையை அடுத்து அமெரிக்க அதிபர் புஷ் ஷும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் ஈராக்கிற்கு திடீர் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

ஈராக்கிய சிறைக்கைதிகள் இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் கொடுமைக் குட்படுததப்பட்டதாகவும் உலகெங்கும் செய்திகளும் படங்களும் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


இதனையடுத்து அமெரிக்க அதிபர், வெளியுறவு அமைச்சர், மற்றும் பிரிட்டிஸ் பிரதமர் வெளியுறவு அமைச்சர் முதலானோர் மண்ணிப்புக் கேட்டும் பரபரப்புத் தணியவில்லை.

இதனையடுத்தே அமெரிக்க அதிபர் புஷ்ஷும் அதிகாரிகளும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் அதிகாரிகளும் பக்தாத்துக்கு தனித்தனி விமானங்களில் திடீரென்று சென்று ஒரே நாளில் தோன்ற இருபதாக பிரிட்டிஷ் சண்டே மிரர் என்ற பத்திரிகை தெரிவிக்கிறது. (து)

## இஸ்ரேல் ஏவுகணை வீச்சில் அரபாத் அலுவலகம் நாசம்

(காஸா)

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் ஃபதா இயக்கத்தின் அலுவலகக் கட்டடத்தை இஸ்ரேல் ஏவுகணை வீசித் தாக்கியது. கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இத் தாக்குதலில் அக்கட்டடம் முழுவதும் சேதமடைந்தது. அதே மாடியில் இயங்கி வந்த பலஸ் தீனத்தைச் சேர்ந்த மற்றொரு இயக்கத்தின் அலுவலகக் கட்டடமும் இத் தாக்குதலில் முழுமையாகச் சேதமடைந்தது. 5 முறை நடைபெற்ற இத்தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)




சென்னை-சிங்கப்பூர் இடையேயான கடல் அடிக்கேபிள் அமைக்கும் பணியை டாடா இண்டிகாம் மற்றும் வி.எஸ்.என்.எல். இணைநது துவக்கியுள்ளன. கடலுக்கடியில் 317கி.மீ தொலை விற்கு கேபிள் அமைக்கும் பணியை மேற்கொண்டு வரும் அதி நவீனக் கப்பல் சென்னை துறைமுகத்தில் நிறுத்திவைக் கப்பட்டிருப்பதைக் காணலாம்.

## இஸ்ரேலுடன் போர் நிறுத்தத்துக்கு பலஸ்தீனம் தயார்- அமைச்சர் நபீல்

இஸ்ரேலுடன் போர் நிறுத்தம் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக பலஸ்தீன அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை அறிவித்தனர்.

தேங்கிக்கிடக்கும் அமெரிக்க ஆதரவு சாலை வரைபட அமைதித் திட்டத்தை புதுப்பிக்கும் நோக்கத்தின் முதல் கட்ட நடவடிக்கையாக சண்டை நிறுத்தத்துக்கு இணங்கவுள்ளோம் என்று பலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சர் நபீல் ஷாத் கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவலை ஜோதானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்தபோது இத்திட்டத்தை வெளியிட்டதாக ஷாத் கூறினார். இதற்கிடையே பலஸ்தீனர்களின் திட்டத்தை அலட்சியம் செய்யப் போவதில்லை என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

பலஸ்தீனர்களிடம் இருந்து செயலைத்தான் பார்க்கிறோம் அறிவிப்புக்களை அல்ல என்று இஸ்ரேல் மூத்த அரசஅதிகாரி கூறினார்.

கடந்தவாரம் காஸாப் பகுதியில் இடம்பெற்ற இரத்தக்களரியில் 13 இஸ்ரேல் வீரர்களும் 32 பலஸ்தீனர்களும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து)

## அமெரிக்க இராணுவத்துக்கு உதவிய ஈராக் பெண்கள் மூவர் கொலை

(பக்தாத்)

ஈராக்கில் அமெரிக்கக் கூட்டணிப் படைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஈராக் பெண்கள் மூவரை ஷியா இனத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.நசிரியா நகரில் ஷியா இனத் தலைவர் அல்சதாரின் ஆதரவு பெற்ற தீவிரவாதிகளுக்கும் இத்தாலியப் படைகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பக்தாத்தில் கூட்டணிப் படைகளுக்கு ஆதரவாக பணியாற்ற மினி பஸ்ஸில் சென்றவர்கள் மீது தீவிரவாதிகள் சுட்டதில் ஈராக் பெண்கள் இருவர் இறந்தனர். அதேபோல் பக்தாத்துக்கு 130 கி.மீ. தொலைவில் குட் எனும இடத்தில் அமெரிக்கர்களுக்கு மொழி பெயர்கவும் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு பெண் குண்டு வெடிப்பில் இறந்தார். பாஸ்ராவில் தீவிரவாதிகள் பீரங்கித் தாக்குதல நடத்தியதில் பிரிட்டிஷ் இராணுவ முகாம் அருகே ஒரு வீடு சேதமடைந்தது. இந்தத் தாக்குதலில் 4 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். இதில் இரட்டைப் பெண் குழந்தைகளும் அடங்கும். நசிரியாவில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் இருந்து பெரும்பாலான சிவிலியன்கள் வெளியேறிவிட்டனர். பக்தாத் புறநகர்ப் பகுதியில் பொலிஸ்நிலையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.இதில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை. (து)

## தென்அமெரிக்க சிறையில் தீ 100 பேர் கருகி மாண்டனர்

தென் அமெரிக்க நாடான ஹோண டுராஸின் வடக்குப் பகுதியிலுள்ள சிறையில் ஏற்பட்ட தீ விபத்தில் 100 கைதிகள் உயிரிழந்தனர்.

கடந்த ஓர் ஆண்டில் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் நடைபெறும் இரண்டாவது மிகப் பெரிய தீவிபத்து இதுவாகும்.

குளிர்சாதனப பிரிவில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக இத் தீவிபத்து ஏற்பட்டதாக சிறைப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை நேரத்தில் இத் தீ ஏற்பட்டதால் 186 கைதிகள் இருந்த சிறைப் பகுதியில் தூங்கிக் கொண்டிருந்த 100 பேர் தீயில் கருகி இறந்தனர். இதில் சிலர் தீயினால் எழுந்த புகையை சுவாசித்ததால் இறந்தனர்.

800 கைதிகள் அடைக்கும் வசதியுடைய இச் சிறையில் 2200பேர் அடைக்கப்பட்டிருந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பாகிஸ்தான் தீவிரவாதிகள் பாதிரியாரைக் கடத்தினார்களா? பொலிஸில் புகார்

பாகிஸ்தானின் தென்மேற்கு நகரமான குவெட்டாவில் கிறிஸ்தவ பாதிரியார் காணாமல் போய் விட்டார். அவரைத் தீவிவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர் என்று பாதிரியாரின் குடும்பத்தினர் கூறினர்.

இதையடுத்து வழக்குப்பதிவு செய்து பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

வில்சன் ஃபஸல் (வயது-41) என்ற அந்தப் பாதிரியார் கடந்த ஞாயிற்றுக்கிழமை குவெட்டா அருகே நவாகில்லி என்னும் இடத்தில் உள்ள தேவாலயத்தில் தனது தலைமையில் வழிபாட்டை நடத்தினார் ஆனால் அதன்பின் அவர் வீடு திரும்பவில்லை.

கிறிஸ்தவ மத பிரசாரத்தில் ஈடுபடுவதை விடுத்து இஸ்லாமில் சேர்ந்து அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போரில் ஜிகாத் ஈடுபட வேண்டும் என்று பாதிரியார் ஃபஸலுக்கு தீவிரவாதிகள் அடிக்கடி மிரட்டல் கடிதங்கள் அனுப்பினர். அவர் அதறகு இணங்காததால் பலவந்தமாக அவரைக் கடத்திச் சென்றிருக்கக்கூடும் என்று பாதிரியாரின் மகன் கேரிவில்சன் சொன்னார். (து)

WORLD NEWS

## உலக தரிசனம்

## அங்கோலாவில் குண்டுவெடிப்பு சேதங்கள் அதிகமில்லை

(பக்தாத்)

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் துருக்கிக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கையில் அங்கோலா தலைநகரில் நான்கு சிறிய அளவிலான குண்டுகள் வெடித்துள்ளன.

இந்தக் குண்டுவெடிப்புக்களால உயிர் சேதமோ பெரும் பொருட் சேதமோ எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இருந்தும் கட்டடங்களில் ஆங்காங்கே சிறுசிறு வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தக் குண்டு வெடிப்புகளுக்கு யார் பொறுப்பு என்று இன்னும் தெரியவில்லை.

எனினும் அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தின் இதற்குப் பொறுப்பென்று குற்றம்சாட்டப்படுகிறது. (து)

## பிரான்ஸ் அணு மின்நிலையத்தில் தீ

கிழக்கு பிரான்ஸில் உள்ள அணு மின் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கையாக அந்நிலையம் மூடப்பட்டுள்ளது. நண்பகல் நேரத்தில் மின் கம்பிகள் அடர்ந்துள்ள பகுதியில் தீப்பற்றியதைத் தொடர்ந்து தீயணைக் கும்படை அணுசக்தி நிலையத்துக்கு விரைந்தது. அணுஉலைக்குத் தொடர்பில்லாத இடத்தில்தான் தீ பிடித்தது. எனவேஅணு உலைக்கோ சுற்றுப்புறச் சூழலுக்கோ பாதிப்பு ஏற்படாது என்று அதிகாரி ஒருவர்தெரிவித்தார். (து)

## இதுவரை 3000வீடுகளை இஸ்ரேலியர் அழித்தனர்

### மன்னிப்புச் சபை அறிக்கை

(லண்டன்)

இஸ்ரேலியர்கள 3000க்கும் அதிகமான பலஸ்தீனர்களின் வீடுகளை அழித்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம்சாட்டி யிருக்கிறது.

கடந்தகால யுத்தங்களாலே இவ்வளவு தொகை வீடுகளை இஸ்ரேலியர்கள் அழித்தார்கள் என்று மன்னிப்புச்சபை கூறுகின்றது.

இதேவேளை, பலஸ்தீன பொதுமக்களின் வீடுகளை இனிமேலும் அழிக்கப்படாதென்று சர்வதேச மன்னிப்புச்சை கேட்டுக்கொண்டுள்ளது.

இராணுவத்தினர் எவ்வித காரணமுமின்றி பொதுமக்களின் வீடுகளைத் தாக்கக்கூடாதென்று மன்னிப்புச்சபை கேட்டுள்ளது. (து)



சீனாவின நிங்போ நகரில் புதிதாகக் கட்டடம் கட்டும் பணிக்காக பழைய கட்டடம் ஒன்று வெடிகுண்டுகள் வைத்துத் தகர்க்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## ஈராக் ஆட்சித் தலைவர் கொலை ஆட்சியின் கையளிப்பைப் பாதிக்காது

### அதிபர் புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் ஆட்சிச்சபைத் தலைவர் கொலை செய்யப்பட்டதையடுத்து ஈராக் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை எந்தவகையிலும் தடைசெய்யாதென அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

அமெரிக்க ஆட்சியின் கீழ் இருக்கும் ஈராக்கை ஈராக்கியரிடமே வரும் ஜூன் மாதம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

இந்த ஆட்சி ஒப்படைப்பை எந்தவகையிலும் ஆட்சிச்சபைத் தலைவரின் கொலை எந்த விதத்திலும் பாதிக்காது என்று நேற்று முன்தினம் புஷ் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

ஈராக்கியர்கள் திட்டமிட்டபடி 30 ஆம் திகதி ஆட்சிப் பொறுப்பை அமெரிக்காவிடமிருந்து கையேற்பார்கள். (து)

# இந்தியாவில் அமையவுள்ள ஆட்சி மூலம் எமக்கு நிரந்தர தீர்வு உருவாக வேண்டும்

## கருணாநிதியிடம் சங்கரி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டு தேர்தல் களத்தில் மக்களின் அமோக ஆதரவு பெற்ற




திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆனந்தசங்கரி கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள மடலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

திராவிட முன்னேற்ற கழகக்கூட்டணியின் அபார வெற்றிக்கு எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள். தமிழகத்து மக்கள் தங்கள் உணர்வுகளை தங்களது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மததியில் அமையப்போகும் ஆட்சியின் மூலம் எமது தமிழ மக்களுக்கு ஒரு நிரநதரத் தீர்வு அமைய வேண்டும். ஆரம்பகாலம தொட்டே எமது பிரச்சினைகள் நன்கு அறிந்த உங்களால் தான் இது முடியும்.உங்களால் தான் இதில் பெரும் பங்களிப்பு செய்யவும் முடியும் என்ப தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.



தாங்கள் மேலும் பல வெற்றிகளைக் குவித்து தமிழ் மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# நட்டஈடுகளை வழங்குவதால் மட்டும் தமிழரின் பிரச்சினைகள் தீர்ந்து விடாது

## சுரேஸ் பிரேமச்சந்திரன்

(கொழும்பு)

தமிழ் மக்களை கொலை செய்து அதற்கு நட்ட ஈடுவழங்குவதால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரமேச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற கந்தப்பொல விவகார விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரேமச்சந்திரன் இதுபற்றி மேலும் கூறுகையில், தமிழர்கள் மீது நடத்தப்படும் கொலைச் சம்பவங்கள் தொடர்கதைகளாகவே உள்ளன.

இத்தகைய வன்முறைகள் தற்போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணி



யின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கந்தப்பொலவில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒரு இனப்பிரச்சினை அல்ல என்றும் இதனைப் பெரிதுபடுத்தி அரசியல் இலாபம் ஈட்ட சிலர் முயன்று வருகின்றனர் எனவும் கூறினார்.(121)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் சமாதான முயற்சிகளை தொடரமுடியாது

## மகேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது ஆட்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினால் சமாதான முயற்சிகளை முறையாக முன்னெடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மகேஸ்வரன் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.


இதுபற்றி அவர்மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் ஜே.வி.பி யுடன் கூட்டுச்சேர்ந்துள்ளது.

ஜே.வி.பி தமிழ் மக்களுக்கு எதிரான கட்சி, இவர்களால் சமாதான முயற்சிகளை சரியான முறையில் முனனெடுத்துச் செல்ல முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இன்னும் சில ம்ாதங்களே நீடிக்கும். இதன் காரணமாக இந்தக் கட்சியினால் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

கந்தப்பொலவில் நடைபெற்ற சம்பவங்களைக் கண்டிக்கும் வகையிலான சுலோகத்தை ஏந்தியவாறு மகேஸ்வரன் சபை அமர்வுகளில்



கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (121)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின்

# கணனி மையத்தில் திருட்டு காவல் துறையினரிடம் புகார்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கணனிப் பயிற்சி, செய்முறைப் பயிற்சி நெறி மையத்தில் கடந்த சனிக்கிழமை இரவு கணனிகள் களவாடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி காவல் பணிமனையில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கணனி பயிற்சியாளர்களுக்கு பயிற்சியினை வழங்கப் பயன்படுத்தி வரும் மேற்படி கணனிகள் அண்மையில செஞ்சிலுவைச் சங்கத் தலைமை செயலகத்திலிருந்து கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து கிளிநொச்சி காவல் பணிமனை குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (4,35)

# போராட்டத்தைக் கைவிட்டு கடமைக்குத் திரும்புங்கள்

## சுகாதார அமைச்சர் வேண்டுகோள

(கொழும்பு)

சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்கள் அனைவரையும் மீண்டும் கடமைக்குத் திரும்புமாறு சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு,வடமேல் மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களைச சோந்த சுகாதார ஊழியர்களுக்கே அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு,வடமேல் சப்பிரகமுவ மாகாண சுகாதார ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்குரிய சுற்றுநிருபங்கள் ஏற்கனவே வெளியிடபபட்டதாக குறிப்பிட்ட அமைசசர் நிமால் ஸ்ரீபால டி சில்வா,

மாகாண ஆளுநர்கள் இந்த புதிய சுற்றுநிருபங்களுக்கு அமைய சம்பள மீள் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர் என்றும்,

இதனால் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்கள் தமது போராட்டத்தை கைவிட்டு விட்டு இன்று முதல் கடமைக்குத் திரும்ப வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (60,10)

# கூட்டுக்கட்சியின் ஆதரவைப்பெறுங்கள் அதன்பின் புலிகளுடன் பேசுங்கள்

## ராஜித சேனாரத்தின அறிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவை வழங்கியிருந்தது தற்போதும் அரசுக்கு பூரண ஆதரவை வழங்கவுள்ளது.

ஆனால் அரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சிகள்தான் சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றன.

எனவே அரசாங்கம் முதலில் தன்னுடன் இணைத்திருக்கும் கட்சிகளுடன சமாதான நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து பேசி அக்கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளவேண்டும்.

அதன பின்னரே தமிழீழ விடுதலைப புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றார். (60,10)

# ஊடகத்துறை பிரதி அமைச்சர் யாழ்ப்பாணம் விஜயம் செய்வார்

(யாழ்ப்பாணம்)

ஊடகத்துறை பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். யாழ்ப்பாணத்தின் சமகால நிலை மைகள் தொடர்பாக ஆராய்வதற்காக வரும் இவர் யாழ்அரச அதிபர் செபத்ம நாதன மற்றும் திணைக்களத் தலை வர்களையும் சந்தித்துக் கலந்துரை யாடவுள்ளார்.

பிற்பகல் 2மணியளவில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் இச் சந்திப்பில் பல முககிய விடயங்கள் குறித்தும் ஆராயப்படும்.

இதனைத் தொடர்ந்து இவர் யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுடன் விசேட சந்திப்பு ஒன்றை மேற்கொண்டு ஊடகவியலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவார் எனத் தெரியவருகிறது. (4,16)

# மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு புலனாய்வுப் பிரிவு அதிகாரி பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில நேற்றுக்காலை நடைபெற்ற துப்பாக்கிச சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. கொலைசெய்யப்பட்ட பொலிஸ் புலனாய்வு உறுப்பினர் துவிச்சககர வண்டியில் சென்று கொண்டிருந்த வேளையிலேயே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தைச் சுற்றி சோத்னை நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக கிழக்குப் பிராந்தியத்திற்குப் பெறுப்பான பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார். (121)

# இளைஞன் படுகாயம்

(மருதங்கேணி)

வேகமாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதிக்குக் குறுக்காக சென்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதனை ஓட்டிவந்த இளைஞர் படுகாயம் அடைந்தார்.

நேற்று முன்தினம் வட்டக்கச்சி புளியம் பொக்கணை வதி சந்திக்கு அண்மையில் நடைபெற்ற இச் சம்பவத்தில் கிளிநொச்சி கச்சேரியடியைச் சேர்ந்த மரியநாயகம் யசோதரன் (வயது-19) என்ற உயர்தரவகுப்பு மாணவனே படுகாயம் அடைந்தவராவார். இவர் தற்பொழுது சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4,35)

## வடமராட்சி கிழக்கில்

# உலக வங்கியின் உதவியுடன் 25 வீடுகள் அமைக்கப்படும்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு விஜயம் செய்த உலக வங்கியின் வீட்டு அபிவிருததி திட்ட அதிகாரி தாரயன் வடமராட்சி கிழக்கில் இராணுவ அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகளை நேரில் பார்வையிட்டுள்ளார்.

உலக வங்கி அதிகாரியுடன் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை, யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர் பி. சுந்தரம்பிள்ளை ஆகியோரும் சென்று பார்வையிட்டனர்.

இதன் பின் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்போவதாக உலகவங்கியின் அதிகாரி தெரிவித்துள்ளார். (4,35)

பிரதி வெள்ளி தோறும்
வலம்புரியுடன்
KID'S OF ENGLISH
(ஆங்கில இணைப்பு)
வெளிவரவுள்ளது.
பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.
Kid's of English

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு - குறள்

வலம்புரி

## சோனியா காந்தியின் பெருந்தன்மை

14வது இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பலத்தை பெற்ற நிலையில் பிரதமராக சோனியா காந்தியை கட்சிக்குழு கூடித் தெரிவு செய்திருந்தது. எனினும் பிரதமர் பதவியை தான் ஏற்கப் போவதில்லை என சோனியா காந்தி அறிவித்துள்ளார். அவரின் இந்த அறிவிப்பு பாரத மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை தந்திருந்தது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த சோனியா காந்தி இந்தியாவின் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற ராஜீவ் காந்தியின் மனைவி, இந்திரா காந்தியின் அன்புக்குரிய மருமகள்.

ராஜீவ் காந்தியின் கரம்பற்றிய நாள்முதல் இந்தியப் பண்பாட்டை அனுசரித்து தன்னை ஓர் இந்திய நாட்டவராகப் பிரகடனப் படுத்திக்கொண்டார். அன்னை இந்திராகாந்தியின் அன்பிற்கு பாத்திரமான சோனியா காந்தி இந்திய நாட்டின் மருமகளாகவே கருதப்பட்டார். எதையும் பொறுமையுடன் அனுசரித்து நடந்த அவர், நேரு குடும்பத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

இந்திரா காந்தியின் இரண்டாவது மகன் காலஞ்சென்ற சஞ்சய் காந்தியின் மனைவி மேனகா காந்தி இந்திய தேசத்தவர். இருந்தும் அவர் இந்தியப் பண்பாட்டை மறந்து மேலைத்தேயப் பண்பாட்டில் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டார். இதனால் அன்னை இந்திரா காந்திக்கும், மேனகா காந்திக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டமையும் , இந்திரா காந்தியைக் கண்டபாட்டில் மேனகா காந்தி தூற்றியமையும் உலகறிந்த விடயங்கள்.

இத்தாலியப் பெண் இந்தியப் பண்பாட்டை அனுசரித்து மாமியார் மெச்சும் மருமகளாக இருக்க, இந்தியப் பெண் மாமியாரைத் தூற்றிக் கேவலப் படுத்தினாரெனில் இங்கு யார் இந்தியப் பெண்ணுக்குரிய இலட்சணங்களைக் கொண்டவர் என்ற வினாவின் முடிவு சோனியா காந்தியாகவே இருக்கும்.

இந்திரா காந்தியின் மருமகள், ராஜீவ் காந்தியின் மனைவி இரண்டு பிள்ளைகளின் தாய் என்ற தகுதிகள் போதும் என்ற பெரும்தன்மையுடன் வாழ்ந்த சோனியா காந்திக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் அறவே இருக்கவில்லை.

எனினும் காலத்தின் கட்டளை அவரை அரசியலுக்குள் இழுத்து வந்தது. இந்திரா காந்தியின் மரணம் ராஜீவ் காந்தியை அரசியலுக்குள் நுழைய வைத்தது. அதே ராஜீவ் காந்தியின் மரணம் வீட்டு வேலைகளோடு இருந்த சோனியா காந்தியை அரசியலுக்குள் அழைத்து வந்தது. வேண்டாம் இந்த அரசியல் என்று சோனியா காந்தி ஒதுங்கியிருந்த போதிலும், காங்கிரஸ் கட்சிக்காரர் விடுவதாக இல்லை. நேருவின் பரம்பரை ஆளாத இந்தியா, இந்தியாவே அல்ல என்று வேதம் ஓதினர்.

ராஜீவ் காந்தியை முடித்ததனால் பாரதப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தியின் மருமகளான சோனியா காந்திக்கு இந்திய மக்கள் அனைவருமே உறவுக்காரர்களாகக் காட்சி கொடுத்தனர்.

ஆனால் இந்திரா காந்தியினதும், அதனைத் தொடர்ந்து ராஜீவ் காந்தியினதும் அகால மரணங்கள் இந்திய நாட்டில் எனக்கு யாருமே உறவு இல்லை என்ற உணர்வை சோனியாவுக்கு ஏற்படுத்தியிருந்தது. தான் பெற்ற இரண்டு பிள்ளைகளையும் எதுவித ஆபத்துமின்றி ஆளாக்கி விடுவதுதான் தனது புகுந்த வீடான நேரு குடும்பத்திற்குத் தான் செய்யக்கூடிய கைங்கரியம் என சோனியா காந்தி முடிவெடுத்திருந்தார்.

அந்த முடிவின் அடிப்படையில் அவர் செயற்பட்டார். ஆயினும் நேரு குடும்பத்திற்கும், இந்திய அரசிற்குமிடையிலான உறவை அவர் குலைக்க நினையாது ஓர் வரையறைக்குள் நின்று தனது பணியை ஆற்றினார்.

சோனியா காந்தி எங்கள் பாரதப் பெண் என்பதை உறுதிப் படுத்துவதாக மக்கள் தங்கள் ஆணையை வழங்கி அவரை பிரதமராக்குமாறு உத்தரவிட்டனர். இங்குதான் சோனியா காந்தியின் நற் பெயரும், இந்திய மக்களின் உயரிய பண்பும் பிரணமிக்கின்றன. எனினும் பாரதப் பூமிக்கு நான் பிரதமராக இருப்பது எனது மனச் சாட்சிக்கு ஒத்துவராத காரணத்தால் நான் அதை ஏற்கவில்லை என்ற சோனியா காந்தியின் அறிவிப்பு, இந்தியாவின் உயர்ந்த பண்புடைமைக்கு இத்தாலியும் குறைந்ததல்ல என்பதை நிரூபித்து விட்டது.

# வட- கிழக்கு உட்பட 3 மாகாணங்களில் சுகாதார ஊழியர்களின் போராட்டம்

### இன்று தொடருமென அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வடக்கு-கிழக்கு, வடமேல் மற்றும் சப்பிரகமுவ மாகாண சுகாதார ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார சேவையாளர்களின் சம்பள முரண்பாடுகளைத தீர்க்கும் வகையில் கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் 01.02.2004 ஆம் திகதி சுற்றறிக்கை மூலம் அதிகரிக்கப் பட்ட சம்பள உயர்வு வழங்கப்படாமையை ஆட்சேபிக்கும் வகையிலேயே வடக்கு- கிழக்கு உட்பட மூன்று மாகாணங்களில் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.இந்தப் போராட்டத்தில் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுகாதார ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் மேற்படி பிரதேசங்களில் உள்ள அரச வைத்திய சாலைகளின பணிகள ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன் நோயாளிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இதேவேளை,வடக்கு-கிழக்கு ,வடமேல் சப்பிரகமுவ மாகாண சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் இன்று தொடரும் என அகில இலங்கை சுகாதார சேவைகள் தொழிற் சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது. (60,10)

# நெடுந்தீவு மக்களின் துயரத்தைப் போக்க புதியபடகு சேவையில் ஈடுபட வேண்டும்

### வெகுஜன அமைப்புகள் ஒன்றியம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு குறிகட்டுவானுக்கிடையே சேவையில் ஈடுபடும் பணிகள் படகுகளின் சீரற்ற தன்மை காரணமாக நெடுந்தீவு மக்கள் பல்வேறு துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அதனால் இப்பகுதியில் புதிய படகுகளை சேவையில் ஈடுபடுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இவ் அமைப்பின் செயலாளர் ப.கனகலிங்கம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்திற்கு பொறுப்பாக இருப்பவர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இவர்களது பொறுப்பில் தான் "குமுதினி"படகுசேவையில் ஈடுபட்டு வருகிறது.

தற்போது இப்படகு திருத்த வேலைக்காக ஊர்காவற் றுறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. 8மாதங்களாகியும் இன்னும் குமுதினி வந்து சேரவில்லை.

இதனால் நெடுந்தீவு மக்கள் கடற்போக்குவரத்தில் ஈடுபட முடியாமல் இருக்கிறது.அனைத்து அத்தியாவசிய தேவைகளையும் யாழ்ப்பாணம் வந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இன்று எதனையும் மேற்கொள்ள முடியாது தவிக்கின்றனர். குமுதினிப் படகின் வெற்றிடத்தை இதுவரை நெடுந்தீவு ப.நோ. கூ.சங்கம் நிறைவேற்றி வந்தது.

ஆனால் அதுவும் இன்று பழுதடைந்து திருத்த வேலைக்கு விடப்பட்டுள்ளது. நெடுந்தீவு மக்கள் மக்கள் நாளாந்தம் மாவலித்துறைமுகம் வந்து போக்குவரத்துச் செய்ய படகில்லாமல் திரும்பச் செல்கினறனர்.

பாதுகாப்பற்ற நிலையில் ஓரிரு மீன் பிடிப்படகுகள் பயணிகளை ஏற்றி வருவதையும் காண முடிகிறது. இவர்களது [illegible]ருக்கு உத்தரவாதமில்லை.

இச் சூழ்நிலை மோசமான விளை வுகளை ஏற்படுத்தும். ஆதலால் இது குறித்து பொருத்தமான ஏற்பாட்டை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேவேளை, குமுதினிப்படகு 25 வருடங்களுக்கு மேல் பழமையானது. ஆதலால் நெடுந்தீவு, குறிகட்டுவான் கடல் போக்குவரத்திற்கு புதிய படகு தேவை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நெடுந்தீவு மக்கள் இன்று பயணம் செய்யவும்,அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துச்செல்லவும், அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றவும் முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்பதை யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மூலம் தங்களின் மேலான கவனத்திற்கு பணிவன்புடன் அறியத்தருகின்றேன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

## ஊன்றுகோல் அறப்பணியகத்தின் உலக அன்னையர் தினவிழா

(பொன்னாலை)

ஊன்றுகோல் அறப்பணியகம் நடாத்தும்உலக அன்னையர் தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் வை.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரைகளை அந்திரான் முருகமூர்த்தி கோவில் பிரதம குருபிரம்ம ஸ்ரீ கௌரீஸ்வரக் குருக் கள் நவாலி பங்குத் தந்தை அருட்திரு அர்.சி.எக்ஸ்.நேசராசா அடிகள் நவாலி தென்னித்தியத் திருச்சபைக் குரு வண் பிதா எஸ்.தேவகுணநந்தன் ஆகியோர் வழங்குவார்கள்

இதன்போது நாயின் மகத்துவம் பேசும் பாடல்கள்,சிறப் புரைகள்,மாணவர்போட்டி,திறந்த போட்டி,அன்னையரை மகிழ்வித்தல்,போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கல் ஆகியன இடம் பெறவுள்ளது. (4-49)

### ஆட்டோவில் வந்த இரு பெண்களால்

## சுதுமலையில் மூதாட்டியின் தாலிக் கொடி அபகரிப்பு


(கொழும்புத்துறை)

ஆட்டோவில் வந்த இரு பெண்கள் மூதாட்டி ஒருவரின் தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி சுதுமலை அம்மன் கோவில் உற்சவத் திற்குச் சென்ற மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மூதாட்டி ஒருவரே இச்சம்பவத்தில் தாலிக் கொடியை பறி கொடுத்தவராவார்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, வாகனங்களால் மேற்கொள்ளப்படும் வழிப் பறிச் சம்பவங்கள் யாழ்.குடாநாடெங்கும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4,51)



### சாயி அருளமுதம்

கிருஷ்ணர் ஜனனமாகிய ரோகிணி நட்சத்திரமானது யோக சாதனை யில் வெற்றியீட்டுதல் அதிலிருந்து பெறப்படும் சக்திகள் ஆகியவற்றுடன் தொடர்புள்ளது. இராமர் ஜனனமா கிய புனர்பூச நட்சத்திரத்திற்கு இராமருடைய பேரருளின் அம்சமான "ஸரணாகதத்ராண"வுக்குத் தம்மை அர்ப் பணிக்கும் எல்லோரையும் ஏற்றுக்கொள ளும் மாபெரும் சக்தி மீது ஒரு மர்மமான செல்வாக்கு உண்டு

நன்றி

நாளாந்த நற்சந்தனை

## பதவியிழந்தவர்களுக்கு விரைவில் நிவாரணம்

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டு தற்போது பதவி நீக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க தொழில் அமைச்சர் அதாவுட செனிவிரட்ண நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீக்கப்பட்ட ஊழியர்கள் பதவி வகித்த காலத்தை கருத்தில் கொண்டே அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செனிவிரட்ண, ஊழியர்கள் பதவி நீக்கத்தின் பின்னணியில் அரசியல் பழிவாங்கல் எதுவுமில்லை என்று தெரிவித்தார். (10)

### கல்வளையில்

## சின்னத்தம்பிப் புலவரின் சிலை புனரமைக்கப்பட்டுள்ளது

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய வளாகத்தில் சின்னத்தம்பிப் புலவரின் சிலை ஒன்று புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டுக்கு முன் இதே வளாகத்தில் இவருடைய சிலை ஒன்று இருந்தது. ஆனால் கடந்தகால யுத்த அனர்த்தம் காரணமாக அச்சிலை முற்றாக அழிக்கப்பட்டது.இது தற்போது மீள நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சின்னத்தம்பிப் புலவர் கல்வளை விநாயகர் மீது "கல்வளை அந்தாதி" எனும் பதிகம் பாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4,49)

### நல்லை நாவலர் மணி மண்டபத்தில்

## இந்து சமய விவகார அமைச்சின் ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட அலுவலர் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 78 ஆவது தொடர் நாளை மாலை 5.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் கோ.சி வேலாயுதம் நிகழ்த்துவார்.

இதேவேளை, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நல்லை நாவலர் மணி மண்டபத்தில் பிரதி புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் பண்ணிசை வகுப்புக்களும், யோகாசன வகுப்புக்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் ஆர்வம் உடையோர் பங்குபற்றிப் பலன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# அரசின் சமாதான நடவடிக்கைக்கு அகாஷி பாராட்டுத் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்து ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி மகிழ்ச்சி அடைந்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை யசூசி அகாஷியை தான் சந்தித்துப் பேசியதாகவும் யசூசி அகாஷி சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்து மகிழ்ச்சி அடைந்துள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை புதிய அரசின் சமாதான நட வடிக்கைகளுக்கு முன்னர், இலங்கைக்கு வழங்குவதற்கு இணங்கிய நிதியுதவியை வழங்குவதாகவும் பிரதமரிடம் யசூசி அகாஷி உறுதியளித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் அதே வேளை தென்மாகாண அபிவிருத்தி குறித்தும் தான் கவனம் செலுத்தவுள்ளதாக யசூசி அகாஷி மேலும் தெரிவித்தார். (61,10)

# வட - கிழக்கிற்கான அமெ.இராஜாங்க அதிகாரியாக கோடி ரெயிலர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயத்தில் தகவல் தொடர்பு அதிகாரியாக இது வரை காலமும் பணியாற்றிவந்த கோடி ரெயிலர் வடக்கு - கிழக்குகிற்கான அமெரிக்க ராஜாங்க அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வரை காலமும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான அமெரிக்க ராஜாங்க அதிகாரியாக பணியாற்றிவந்த கிறிஸ் ரீன் லோங் இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் தகவல் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப் பட்டதை தொடர்ந்தே கோடி ரெயிலர் அவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்

பல்வேறு அரசியல் காரணங்களுக்காகவும் வழங்கப்பட்டிருக்கும் இவ் நியமனங்களை இருவரும் இம் மாதம் முதல் பொறுப்பேற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. (4,16)

# சமூகசேவை அலுவலர்களுக்கு ஒரு நாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சமூகசேவை அலுவலர்களுக்கு வாழ்க்கைதிறன் சார் கல்வியூடாக சிறுவர் உரிமை களை பாதுகாத்தல் எனும் தலைப்பில் ஒருநாள் பயிற்சிப்பட்டறை யாழ். ஆஸ்பத் திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இன்று காலை 9.00மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமூக சேவை அலுவலர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு இணைப்பதிகாரி சின்னவன் ஸ்ரீபன் சுந்தர்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் இப் பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சமாதானச் செயலகப் பணியில் மாற்றங்களைச் செய்கிறது அரசு

## ஊழியர்களுக்கு பணிநீக்கக் கடிதம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

சமாதானச் செயலகத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளவரும் முன்னாள் ஐ.நாவின் ஆயுத பரிகரண நிபுணரும் இலங்கையின் சிரேஷ்ட சர்வதேச இராஜ தந்திரியுமான ஜயந்த வழங்கும் வகையில் சமாதானச் செயலகத்தில் மாற்றங்கள் செய்யப்பட வுள்ளன.

இதற்காக இச் செயலக ஊழியரகளுக்கு இம்மாத இறுதியுடன் தத்தமது சேவைகளை முடித்துக் கொளளுமாறு கடிதங்கள் அனுப்பப்

## பொ.சு. பரிசோதகர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வை வழங்கக்கோரி யாழ். மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதன்பொருட்டு சுகாதார பரிசோதகர்கள் அனைவரையும், சுகவன லீவுப் போராட்டத்தில் ஈடுபடுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதார ஊழியர்கள் இன்றும போராட்டத்தில் ஈடுபடுகினறனர். (த-252)

## புலனாய்வு...

அண்மையில் இரு தரப்புக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் இரு தரப்பும் புரிந்துணர்வுடன் செயற்படுவது என்றும் போர் நிறுத்த உடன்படிக்கையை மதித்து நடப்பது என்றும் உறுதியளிக்கீப் பட்டது. இதனடிப் படையில் விடுதலைப்புலிகள் மிக அவதானமாகச் செயற்பட்டு வருகினறனர்.

இந்த அமைதிச் சூழலை விருமபாதசக்திகளின் சதி வேலையே இதுவென மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் அமைதியையும், சமாதானத்தையும் நல்ல முறையில் பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கௌசல்யன் கேட்டுக் கொண்டுள்ளார். (த-121)

*(சூட்டுச் சம்பவம் தொடர்பான செய்தி 8ம் பக்கத்தில்)*

## முஸ்லிம் ...

இவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக ஒழுக்காற்றுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக் குழு ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கும் வரை இவர்களை கட்சியில் இருந்து இடை நிறுத்துவதற்கு கட்சியின் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளதாகக் கட்சியின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (ச)

## பாராளுமன்றத்தில்...

இதற்கு ஆளும்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து சபையின் நடுவே வந்து கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர். சபாநாயகர் கட்சி சார்பாக நடந்துகொள்கிறார் என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதனை அடுத்து பாராளுமன்றம் ஜூன 8ம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார். (ச-121)

# அகதிகள் புனர் வாழ்வுக்கழகத்தினால் யாழில் மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் வாழும் மக்களிடையே மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தை படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததையடுத்து இங்கு பல்வேறு விதமான அடிப்படை மனித உரிமை மீறல்களும், சிறுவர் துஷ்பிரயோகம், அதிகாரதுஷ்பிரயோகம் போன்றனவும் இடம் பெற்றுவருகின்றன.

இதனைக் கருத்திற் கொண்டே அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினர் விழிப்புணர்வு நடவடிககைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மனித உரிமைகள் பற்றி அடிப்படை அறிவினை பல தரப்பட்டவர்களி டையேயும் ஏற்படுத்தும் விதமாக வீதி நாடகங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்பவற்றையும்அகதிகள் புனர்வாழ்வுக கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (4-35)

# அரிசியின் விலையை குறைக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(கொழும்பு)

அரிசியின் விலையை குறைக்கும் நோக்குடன் கூட்டுறவுச்சங்க களஞ்சிய சாலையில் உள்ள சகல நெல்லையும் அரிசியாக்கி சந்தைக்கு அனுப்பிவைக்குமாறு விவசாய விற்பனை அபிவிருத்தி மற்றும் இந்துசமய அலுவல்கள், தமிழ் மொழிமூல பாடசாலைகள் அபிவிருத்தி, வடக்கு தொழிற்பயிற்சி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கூட்டுறவு ஆணையாளருக்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணம் இடைநிறுத்தப் பட்டதை அடுத்து வர்த்தக நிலையங்களில் அரிசியின் விலை அதிகரித்து வருகின்ற நிலையிலேயே அமைச்சர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். பொலநறுவை, மட்டக்களப்பு உள்ளிட்ட விவசாய பிரதேசங்களில் இருந்து கூட்டுறவுச் சங்கங்கள நெல்லைக் கொள்வனவு செய்து நியாயமான விலைக்கு விற்பதன் மூலம் அரிசியின் விலை வெகுவாகக் குறையும் என தான எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிடடுள்ளார்.

இதேவேளை விவசாய உற்பத்தி மற்றும் ஊக்குவிப்புக் குறித்து உடனடியாக இரண்டு சட்ட மூலங்களை தயாரித்து அதனை அமைச்சரவையில் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.(த-4)

# புலிகள் - இராணுவம் நேற்று திருகோணமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று பிற்பகல் திருகோணமலையில் இடம்பெற்றது.

பிற்பகல் 2.30 மணிதொடக்கம் 3.30 மணிவரை திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுச் செயலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் கலந்து கொண்டார்.

இராணுவத் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி தேவகே உட்பட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பினை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், குச்சவெளி, நிலாவெளிப் பகுதி மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினரால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் அனுமதி அட்டை முறையை நீக்குவது தொடர்பாக இராணுவத்தினருக்கு தான் அழுத்தம் கொடுத்ததாக தெரிவித்தார்.

திருகோணமலையில் தற்போது நிலவிவரும் அமைதி போன்று இனிவரும் காலங்களிலும் பேணப் படுவது தொடர்பாக இரு தரப்பலும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் விடுதலைப் புலிகளுடனான நேற்றைய சந்திப்பு சுமுகமாக அமைந்ததாகவும் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார். (த-121)

## சமாதானப்....

முதற்சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையிலும் அதனைத் தொடர்ந்து வரும் ஓரிரு சுற்றுக்களிலும் தனியே இடைக்கால நிர்வாகம் குறித்து ஆராய்வதற்கு அரசாங்கம் விருப்பம் தெரிவித்திருக்கின்ற போதிலும் ஏனைய சுற்றுக்களில் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு பற்றிய பேச்சுக்களை முன்னெடுப்பதற்குரிய நிகழ்ச்சி நிரலை உள்ளடக்குமாறு அனுசரணையாளர்களை அரசாங்கம் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பேச்சுக்கான நிகழ்சி நிரல் தயாரிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பணி முடிவடைந்ததும் அது பற்றிய விபரங்களை நோர்வே அரசாங்கம் உத்தியோக பூர்வமாக வெளி[illegible]ம்

பெரும்பாலும் ஜூலை [illegible]த இறுதியில் அல்லது ஓகஸ்ட் [illegible]த ஆரம்பத்தில் பேச்சுக்களை ஆரம்பிககக கூடியதாக இருக்குமென தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. மேலும் பேச்சுவார்த்தைக்கான இறுதிசுற்றுக்கள் எங்கெங்கு நடத்தப்பட வேண்டும். அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் என்பன குறித்து உறுதியான இணக்கப்பாடு இன்னமும் காணப்படாததால் நிகழ்ச்சி நிரலுக்கு இறுதிவடிவம் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)






இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.